

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020

வர்த்தக திணைக்களம்

செலவினத் தலைப்பு இலக்கம். 295

உள்ளடக்கம்

			பக்க இலக்கம்
அத்தியாயம் 01	-	நிறுவனத்தின் விவரம்	03
அத்தியாயம் 02	-	முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	53
அத்தியாயம் 03	-	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	57
அத்தியாயம் 04	-	செயலாற்றுகை சுட்டிகள்	66
அத்தியாயம் 05	-	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG)அடையும் செயலாற்றுகை	68
அத்தியாயம் 06	-	மனித வள விபரம்	70
அத்தியாயம் 07	-	இணக்க அறிக்கை	73
	-	**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**	இணைப்பு

அத்தியாயம் 01 – நிறுவன ரீதியான விளக்கம்

1.1 அறிமுகம்

வர்த்தக திணைக்களமானது, வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக கொள்கை விடயங்களிலும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளினை இருதரப்பு மற்றும் பல்தரப்பு மட்டங்களில் பேணிக்கொள்வதிலும் மதியுரை வழங்கும் முகவராண்மையென்ற முக்கியமான பாத்திரத்தினை வகித்து வருகின்றது. வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்புக்களுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக வர்த்தக திணைக்களத்தினால் பல்வேறு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.2 திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

திணைக்களத்தின் நோக்கு

"சர்வதேச வர்த்தக உறவுகளினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்"

திணைக்களத்தின் செயற்பணி

"இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்."

1.3 திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்

1. உலக வர்த்தக நிறுவனத்தில் அனைத்து மட்டங்களிலுமான (அதாவது, தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் தொழில்நுட்ப) கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பவற்றில் வினைத்திறன் வாய்ந்த பிரதிநிதித்துவம் மற்றும் பங்குபெறுதல் என்பவற்றினூடாக பல்தரப்பு மட்டங்களில் இலங்கையின் பொருளாதார, வர்த்தக மற்றும் வாணிப நலன்களினைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும் இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த நலன்கள் சார்ந்த விடயங்களில் பொதுவான நிலைப்பாட்டினைக் கொண்டு வருவதற்கு ஒத்திசைவான உவநி உறுப்பு நாடுகளுடன் ஒன்றிணைதலும் ஒத்துழைத்தலும்.

2. பரஸ்பரமற்ற முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் அதாவது இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பொதுவான முன்னுரிமை முறைமைகளின் (GSPs) கீழான வரிச் சலுகைகளினைச் சம்பாதித்துக் கொள்வதன் மூலம் சந்தை அணுகுமுறையினைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தைகளினை நடாத்துதல்.

3. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTAs) மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் (RTAs) போன்ற பரஸ்பர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான முன்னுரிமை சந்தை அணுகுமுறையினைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தைகளினை நடாத்துதல்.

பேச்சுவார்த்தைகளின் கீழான உடன்படிக்கைகள் பின்வருமாறு.

i. பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா பேச்சுவார்த்தைகள் (BIMSTEC). இதில் ஈடுபடும் நாடுகள்: பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இலங்கை, தாய்லாந்து.

ii. சீன இலங்கை சுதந்திர சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSFTA)

iii. இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA)

iv. இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLTFTA)

4. இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான நடவடிக்கைகளின் தாக்கத்தினை குறைத்தல் அல்லது இல்லாமல் செய்வதற்காக இருதரப்பு மற்றும் பல்தரப்பு மட்டங்களில் வினைத்திறன் வாய்ந்ததும் போதுமானதுமான பிரதிநிதித்துவங்களை ஏற்படுத்துவதன் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளினை எடுத்தல் மற்றும் பிரதான வெளிநாட்டு ஏற்றுமதி சந்தைகளில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய சந்தை அணுகுமுறையினை கண்காணித்தல்.

5. பிராந்திய / சர்வதேச நியமங்களைத் தாபிக்கும் அமைப்புக்களிலிருந்து அங்கீகாரம் / அதிகாரபூர்வமான ஆதரவினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தேசிய மட்டத்தில் தேவைப்படும் நியமங்கள் / நடைமுறைகளினை வகுப்பதன் மூலம் இறக்குமதி சந்தைகளில் விதித்துரைத்த சந்தை நுழைவுத் தடைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளினை எடுத்தல்.

6. கொழும்பு மற்றும் பிராந்திய நகரங்களில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் பொதுவான முன்னுரிமை முறைகள் என்பவற்றின் கீழ் கிடைக்கக்கூடிய சந்தை அணுகுமுறை வாய்ப்புக்கள் மீதான விழிப்புணர்வு கருத்தரங்குகள் / செயலமர்வுகளை நடாத்துதல்.

7. வழங்கல் தரப்பு நிர்ப்பந்தங்களை தெளிவுபடுத்துவதற்கான மதியுரை உள்ளடங்கலாக இலங்கையின் ஏற்றுமதிகளின் மீதான அத்தகைய நடவடிக்கைகளின் தாக்கத்தினைப் பகுப்பாய்வு செய்கின்றதும் வெளிநாட்டுச் சந்தைகளில் தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகளின் தன்மைகளின் விருத்திகள் தொடர்பிலான சந்தை அணுகுமுறைத் தகவல்களை பரவச் செய்தல்.

8. மூல விதிகள், உற்பத்தி, நடைமுறை சார்ந்த தேவைப்பாடுகள் போன்றவற்றின் மீதான உசாவுதல்கள் உள்ளடங்கலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுக்கான தகைமை தொடர்பில் ஏளற்றுமதியாளர்களுக்கு மதியுரை வழங்குதலும் வழிகாட்டுதலும்.

9. பின்வரும் முன்னுரிமை திட்டங்கள் மற்றும் பிராந்திய, இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதிகளினை வசதிப்படுத்துவதற்கு உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் வழங்கலினைத் துரிதப்படுத்துதல்

i. பொதுவான முன்னுரிமை முறைமை (GSP)

ii. வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)

iii. சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)

iv. தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)

v. இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

vi. பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

vii. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

viii. சிங்கப்பூர் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SSLFTA)

10. சர்வதேச வர்த்தகம் மற்றும் உலகநி உடன்படிக்கைகளில் புதிய அபிவிருத்திகளுடன் தொடர்புடைய தலைப்புக்களின் மீது கொழும்பு மற்றும் பிராந்திய நகரங்களில் வெளிநாட்டு மூலவள ஆளணிகளுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

11. தனியொரு வினாவுக்கு விடையளிக்கும் வகையில், இலங்கையிலிருந்து அல்லது இலங்கைக்கு இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் விதித்துரைக்கப்பட்ட பொருட்களுடன் இணங்குவதற்குத் தேவைப்படும் அனைத்துத் தேவைப்பாடுகள் தொடர்பான விபரங்களைப் பரவச் செய்யும் 41 நிறுவனங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுடன் "இலங்கை வர்த்தக தகவல் இணையத்தள நுழைவாயில்" இற்கான அனுசரணையினை வழங்குதல்.

12. சுமுகமான வழிமுறைகளினூடாக வெளிநாட்டுத் தரப்புக்கும் இலங்கைத் தரப்புக்குமிடையிலான வர்த்தக பிணக்குகளுக்குத் தீர்வு காணுதல்.

13. இறக்குமதி செய்யும் நாடுகளினால் நடாத்தப்படும் குவிப்பெதிர்ப்பு விசாரணைகளுக்கு அவர்களின் பொருட்கள் உட்படுகின்ற போது அவர்களின் எதிர்வினைகளினைத் தொகுப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு வழிகாட்டுதலும் உதவியளித்தலும்.

14. இறக்குமதி செய்யும் நாடுகளினால் நடாத்தப்படும் குவிப்பெதிர்ப்பு விசாரணைகளுக்கு அவர்களின் பொருட்கள் உட்படுகின்ற போது அவர்களின் எதிர்வினைகளினைத் தொகுத்தலும் பகுப்பாய்வு செய்தலும்.

15. வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்: வெளிநாட்டு வர்த்தக பிதிநிதித்துவமானது வெளிநாடுகளில் உள்ள 30 இலங்கை தூதரகங்களில் சேவையாற்றும் அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களை ஊக்குவிப்பதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபட்டு வரும் 31 வர்த்தக திணைக்கள உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளது.


15. தற்போதைய உள்ளார்ந்த இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராய்ச்சியினை நடாத்துதல்.

16. வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைகள்

17. கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்:

18. கூட்டு ஆணைக்குழுக்கள்.'. குழுக்கள் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு சட்ட ரீதியான உடன்படிக்கைகளினை (வுஜகுயுள) ஏற்பாடு செய்தலும் ஒருங்கிணைப்புச் செய்தலும்.

1.4 நிருவாக கட்டமைப்பு : வர்த்தக திணைக்களம்



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகளும் அவற்றின் செயலாற்றுகையும்

1.5.1 பல்தரப்பு விவகார பிரிவு

இலங்கையின் பல்தரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (றுவுழு) உடன்படிக்கைகள் மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD) உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO) சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் றுவுழு சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

I. **2018 மே இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குவிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் வழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சட்டங்களினை அமுல்படுத்துதல்.**

2020.10.19 ஆம் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் இரண்டு சட்டங்களை அமுல்படுத்தும் பொருட்டு 02 வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டதுடன் ஒழுங்குவிதிகளின் இரண்டு தொகுதிகள் மீளாய்வுக்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பன வரையப் பெற்று வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் பின்வரும் பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. வர்த்தக பரிகாரங்கள் தொடர்பில் பத்திரிகை / ஊடகங்களினூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

வர்த்தக பரிகாரங்கள் சட்டங்கள் மீதான அமுலாக்கலுடன் தொடர்புடைய குறிப்பொன்று அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கைத்தொழில் அமைச்சானது செய்தித் தொகுப்பொன்றினை பிரசுரித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பான குறிப்பொன்று வர்த்தக மன்றங்கள் மற்றும் உற்பத்திப் பொருள் சங்கங்கள் என்பவற்றிற்கிடையே பகிரப்பட்டுள்ளது.

ஆ. வர்த்தக பரிகாரங்கள் தொடர்பில் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினருக்குப் பயிற்சியளித்தல்

கொவிட் – 19 வைரஸ் நோய்த் தொற்று காரணமாக உலக வர்த்தக நிறுவனம் – ஜெனிவாவிலிருந்து வளவாளர் ஒருவரின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு சாதகமான சூழ்நிலை இருக்கவில்லை.

இ. குறித்த அலகிற்கு பொருளியலாளர் ஒருவரினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

வர்த்தக பரிகார அலகிற்கு பொருளியலாளர் ஒருவரினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த விடயமானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

II. **உலக வர்த்தக நிறுவனத்திற்கு அறிவித்தல்களைச் சமர்ப்பித்தல்**

அறிவித்தல்களைச் சமர்ப்பிக்காமல், உலக வர்த்தக நிறுவனத்திற்கான நிரந்தர பிரதிநிதி தற்காலிக இடைநிறுத்தலினை அமுலாக்குவதற்கான அடிப்படை தொட்டர்பில் விளக்கங்களினையும் இலங்கைக்கான ஏற்றுமதிக்ள மீதான கடன் கட்டுப்பாடுகளினையும் அளித்துள்ளது. சமர்ப்பித்தலானது மேற்கொள்ளப்பட்டிருப்பின், நாட்டின் கடன் வீதசாரத்தின் மீது பாரதூரமான விளைவுகளினை ஏற்படுத்தக் கூடிய கொடுப்பனவு உறுதியுரை மீதியின் கீழ் இது மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

III. உலக வர்த்தக நிறுவன வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் தேவைப்பாடுகளினை நிறைவு செய்தல்.

அ. வர்த்தக திணைக்கள இணைய தளத்தின் ஒவ்வொரு விடயப் பரப்பின் விசாரணைப் புள்ளிகளினை வெளியீடு

வர்த்தக திணைக்கள இணையத்தளத்தின் ஒவ்வொரு விடயப் பரப்பின் விசாரணைப் புள்ளிகளின் வெளியீடானது முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஆ. வர்த்தக திணைக்களம், இலங்கை வர்த்தக இணையத்தள நுழைவாயில் (ளுடுவுஜீ) மற்றும் படிமுறையிலான தொழிற்பாடு என்பவற்றினால் அளிக்கப்படும் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

சர்வதேச வர்த்தக நிலையத்துடன் (ITC) ஒன்றிணைந்து ஐந்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. குறித்த ஆண்டுக்கான முதலாவது நிகழ்ச்சித்திட்டம் கண்டியில் பெப்ரவரி 12 ஆம் திகதியும் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் குருநாகலில் பெப்ரவரி 13 ஆம் திகதியும் நடாத்தப்பட்டன. மூன்றாவது நிகழ்ச்சித்திட்டம் காலியில் பெப்ரவரி 18 ஆம் திகதியும் நடாத்தப்பட்டது. நான்காவது நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாணத்தில் பெப்ரவரி 20 ஆம் திகதியும் நடாத்தப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி அமர்வானது கொழும்பில் பெப்ரவரி 28 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

இ. இலங்கை வர்த்தக தகவல் நுழைவாயிலில் ஒழுங்குமுறையில் இற்றைப்படுத்தல்களினை மேற்கொள்ளுதல். (SLTIP)

இலங்கை வர்த்தக தகவல் நுழைவாயிலானது 40 அரசாங்க நிறுவனங்களின் தகவல்களை முறையாகப் பெற்று (மாதாந்தம்) வருடம் முழுவதும் தொடர்பு கொள்வதன் மூலம் வருடம் முழுவதும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பேணி வருகின்றது.

ஈ. இலங்கையில் இலங்கை வர்த்தக தகவல் நுழைவாயிலினை நடாத்துவதற்கு ஏற்பாடுகளினை மேற்கொள்ளுதல்.

SLTIP இன் தற்போதைய அனுசரணையாளரான உலக வங்கியானது 22021 ஜூன் வரையில் இன்னுமொரு வருடத்திற்கான அனுசரணைச் செலவினைப் பொறுப்பேற்பதற்கு உடன்பட்டது. திணைக்களமானது 2021 ஜூனிலிருந்து நுழைவாயிலொன்றிற்கு அனுசரணை வழங்கவும் பேணுவதற்கும் பொருத்தமான கம்பனியொன்றினைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளினை மேற்கொண்டு வருகின்றது. தொழில்நுட்ப விடயங்களானவை, இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மையுடன் (ICTA) கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

உ. ஏற்றுமதி நடைமுறைகளுக்கான படி முறையிலான தொழிற்பாட்டினை அஅறிமுகம் செய்தல்.

வர்த்தக திணைக்களமானது தெரிவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி நடைமுறைகளுக்கு படிமுறையிலான தொழிற்பாட்டினை அறிமுகப்படுத்தும் செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றது. அதற்கிணங்க, 19 உற்பத்திப் பொருட்கள இனங்காணப்பட்டுள்ளதுடன் இனங்காணப்பட்ட நடைமுறைகளின் செல்லுபடித் தன்மையானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. செல்லுபடியாகும் செயன்முறையானது, குறித்த ஆண்டின் இறுதியில் 90% வரையில் பூர்த்தியடைந்துள்ளது.

ஊ. சேதன பழங்கள் மற்றும் மரக்கறிகள், சேதன கறுவா, கறுவா எண்ணெய் மற்றும் கன்னித் தேங்காய் எண்ணெய் என்பவற்றின் ஏற்றுமதி நடைமுறைகளினை இலகுபடுத்துவது தொடர்பான முன்மொழிவு

இலகுபடுத்தப்பட்ட நடைமுறைகள் நிரல்படுத்தப்பட்டு அங்கீகாரத்திற்காக உரிய நிறுவனங்களுக்கு அஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இலகுபடுத்தும் செயல்முறையானது குறித்த ஆண்டின் இறுதியில் 90% வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

IV. உவநி தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை

அ. உலக வர்த்தக நிறுவன தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை (ITA) கைச்சாத்திடல் மதியுரையினை விளக்குவதற்கு அக்கறைதார்களுடன் உசாவுகையினை மேற்கொள்ளுதல்

அக்கறைதாரர் கூட்டமொன்று 2020 மார்ச் 05 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இணக்கப்பாடுகளுக்குக் கட்டுப்படுவதன் மூலம் உலக வர்த்தக நிறுவன தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கைக்கான தரப்பொன்றாக அமைவதில்லை என்பது தொடர்பான வர்த்தக திணைக்களத்தின் நிலைப்பாடு தொடர்பில் ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் கவனத்தில் கொள்ளப்பட்டு ITC உற்பத்திப் பொருட்களின் தீர்வைகளினை நீக்குவது தொடர்பில் கவனத்தில கொள்ளப்படும்.

ஆ. உவநி தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை ITA மீதான செயலமர்வு

கொவிட் – 19 வைரஸ் நோய்த் தொற்று காரணமாக செயலமர்வொன்றினை நடாத்துவதற்கு உவநி –ஜெனிவாவிலிருந்து வளவாளர் ஒருவரின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு சாத்தியமில்லாமல் போய்விட்டது.

V. 2020 ஜூனுக்கு அப்பால் இலத்திரனியில் தொடர்பாடல் மீதான சுங்கத் தீர்வைகள் தொடர்பான உவநி தடைக்காலத்தினை நீடிப்பது தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு

2020 பெப்ரவரி 13 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில், தடை க் காலத்தினை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பது குறித்து ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

VI. TBT தொடர்பான விடயங்கள் தொடர்பில் முறையான கூட்டங்கள் மற்றும் அமர்வுகளில் முன்னாள் அலுவலர்களுடன் பங்குபற்றுதல்

கொவிட் 19 வைரஸ் நோய்த் தொற்றுடன் தொடர்புடைய சுகாதார அறிவுறுத்தல்கள் காரணமாக கூட்டங்கள் எதுவும் நடாத்தப்படவில்லை.

VII. சீனாவினால் முன்மொழியப்பட்ட உவநி முதலீட்டு வசதிப்படுத்தல் உடன்படிக்கை மீதான இலங்கையின் நிலைப்பாடு.

இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வர்த்தக திணைக்களம் என்பன, சீனாவினால் முன்மொழியப்பட்ட உவநி முதலீட்டு வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் அமுலாக்கங்களினை ஆய்வு செய்து வருகின்றதுடன் ஆய்வின் 45% ஆனது குறித்த ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

Viii வியாபாரப் பண்டங்களுக்கான பொது நிதியத்தின் (CFC) பேரவைக் கூட்டங்களில் இலங்கையின் நலன்களினைப் பிரதிநிதித்துவம் செய்தல்.

வியாபாரப் பண்டங்களுக்கான பொது நிதியத்தினால் வழங்கப்பட்ட கருத்திட்ட நிதியிடல் வசதிப்படுத்தலிலிருந்து இலங்கையிலுள்ள தரப்பொன்றிற்கான நிதியிடல் உதவுகைக்கான பரிந்துரைகளுடன் முன்மொழிவொன்றினைச் சமர்ப்பித்து முன்மொழிவொன்றினைப் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், இலங்கையிலுள்ள வியாபார சமூகத்திடமிருந்து எவ்வித முன்மொழிவும் பெறப்பட்டிருக்கவில்லை.

I. **அரசாங்க பெறுகைகள் உடன்படிக்கையினை (GPA) ஏற்றுக் கொள்ளும் சாத்தியப்பாட்டினை கண்டறிவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட வேண்டிய குழுவில் பங்குபற்றுதல்**

வர்த்தக திணைக்களமானது அரசாங்க பெறுகைகள் உடன்படிக்கை மீதான அதன் அவதானங்களை அனுப்பி வைத்துள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் கூட்டங்கைள் எதுவும் நடாத்தப் படவில்லை.

II. உலக வர்த்தக நிறுவனத்தின் 12 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் இலங்கை தூதுக்குழுவின் பிரதிநிதித்துவம் (MC12)

12 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடானது தற்போதைய கொவிட் 19 வைரஸ் நோய்த் தொற்று காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. கூட்டத்திற்கான வர்த்த கதிணைக்களத்தின் தயாரிப்பு வேலைகள் தொடர்பில் உரி ய நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

III. மீன்பிடி உதவுதொகைகள் குறித்து தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல்.

உலக வர்த்தக நிறுவனத்தில் குறித்த விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மீன்பிடி திணைக்களத்துடன் இது தொடர்பில் ஆலோசனைகளினை மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளுக்கான உள்ளீடுகளினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

IV. **அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவாக காணப்பட்டமைக்காக (50%) இலங்கையின் தரிவு கட்டப்பாடுகளின் காரணமாக விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான விவசாய – விசேட பாதுகாப்புப் பொறிமுறை மீதான ஒழுங்குமுறைகள் மீதான பேச்சுவார்த்தைகளினைத் தொடருதல்.**

விசேட பாதுகாப்பு பொறிமுறை தொடர்பில் விவசாய அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளினை மேற்கொண்டு வர்த்தக திணைக்களம் தீர்மானிக்கும் இலற்கையின் நிலைப்பாடானது எற்றுக் கொள்ளத் தக்கதாகும். எவ்வாறாயினும், ஆண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு உலக வர்த்தக நிறுவன பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

V. உலக வர்த்தக நிறுவனத்தில் சிறிய மற்றும் நலிவடைந்த நாடுகள் (SVE) மற்றும் தேறிய உணவு இறக்குமதி அபிவிருத்தி நாடுகள் (NFIDC) என்பவற்றின் உறுப்பு நாடுகளுடன் S மற்றும் DT இற்கான முன்மொழிவுகளினை சேகரிப்பதன் மூலம் சிறிய மற்றும் நலிவடைந்த நாடுகள் (SVE) மற்றும் தேறிய உணவு இறக்குமதி அபிவிருத்தி நாடுகள் (NFIDC) என்ற வகையில் இலங்கைக்கான பாதுகாப்பு விசேட மற்றும் வேறுபட்ட முறை.

உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியானவர் ஜெனிவாவில் ஒத்திசைவான எண்ணங்களைக் கொண்ட விசேடமானதும் வேறுபட்டதுமான முறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார்.

VI. பகுப்பாய்வு ஆற்றலினை அதிகரிப்பதற்கு சிறிய தூதுக்குழுவின் கீழ் உலக வர்த்தக நிறுவன குறுகிய கால பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்துக்கான பாதுகாப்பு நிதியிடல்.

கொவிட் 19 வைரஸ் நோய்த் தொற்று காரணமாக, உலக வர்த்தக நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

1.5.2 இருதரப்பு விவகாரப் பிரிவு

I. **இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)**

2000 மார்ச் 01 இலிருந்து அமுலுக்கு வந்த இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது, இந்திய சந்தைக்கு பெருமளவிலான இலங்கையின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் கணிசமானளவு பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்கி

வருகின்றது. இந்தியாவுக்கான இலங்கை ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 2020 இல் 604.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த அதேவேளையில் இது 2019 இல் 759.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது. இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் 60% இற்கும்அதிகமானவை ISFTA வரிச்சலுகைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளமை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ISFTA இன் கீழ், இலங்கையானது 2020 இல் இந்தியாவுக்கு 358.54 மில்லியன் அ.டொலர் பெறுமதியுடைய பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளதுடன் இது 2019 இல் 489.69 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளது.

ISFTA இன் கீழ், இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பிரதான பொருட்களில் விலங்குணவு, பாக்கு, விலங்கு மற்றும் தாவரக் கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் மற்றும் அவற்றின் பிரித்தெடுப்புக்கள், காப்பளிக்கப்பட்ட செப்புக் கம்பிகள் மற்றும் வயர்கள், கழிவு மற்றும் துணடுக் காகிதங்கள் மற்றும் கடதாசியினாலான பலகைகள், தளபாடம் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்கள், தாதுப்பொருள் சேர்க்கப்பட்ட நீர், காற்றேற்றப்பட்ட நீர், துவிச்சக்கர வண்டிகள், தைத்த ஆடைகள் போன்றன உள்ளடங்குகின்றன. IFFTA இன் 8 மில்லியன் துண்டுகள் வருடாந்த தைத்த ஆடைகள் கோட்டாப் பங்கின் கீழ், இலங்கை ஏற்றுமதியாளர்கள் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவுக்கு 3,487,608 தைத்த ஆடைகள் துண்டுகளினை (HS 61 மற்றும் 62 அத்தியாயங்களின் கீழானவை), எற்றுமதி செய்துள்னர். இது 2019 இல் 96% இல் காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 44% பயன்பாட்டு வீதத்தினைக் கொண்டிருக்கும். இந்த வீதமானது 2020 இல் கொவிட் – 19 வைரஸ் தொற்று காரணமாக ஏற்றுமதிகளில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.

வர்த்தக திணைக்களமானது ISFTA அமுலாக்கம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் உரிய அக்கறைதாரர்களுடன் தொடர்ச்சியாக முயற்சிகளினை மேற்கொண்டுள்ள போதிலும் அவற்றுள் சில இன்னமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகள் கறுப்பு மிளகு மற்றும் உலர்த்திய தேங்காய் என்பவற்றின் மீதான அளவு ரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் வனஸ்பதி மீதான கோட்டாப் பங்கு ஒதுக்கீடு என்பவற்றினையும் உள்ளடக்குகின்றன. 2020 காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வரிச் சலுகைகளின் கீழான வாசனைத் திரவியங்களின் மற்றும் அது தொடர்பான உற்பத்திப் பொருட்களின் ஆதிக்க போக்கினை நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளினை எடுத்துள்ளது.

I. இலங்கை - பாகிஸ்தான் உடன்படிக்கை (PSFTA)

2005 இல் செயற்பாட்டிற்கு வந்த இலங்கை - பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் இரண்டு நாடுகளுக்குமிடையில் இருதரப்பு வர்த்தகத்தினை விரிவாக்குவதில் கணிசமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளது. 2020 இல் இடம்பெற்ற 74.27 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பாகிஸ்தானுக்கான மொத்த ஏற்றுமதிகளில் 53.01 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானவை ளுகுவுயு இன் கீழான ஏற்றுமதிகளாகும;. PSFTA இன் கீழ் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்படும் பிரதான ஏற்றுமதிப் பொருட்களினுள் தேங்காய்கள், வெற்றிலை, உலர்த்திய தேங்காய், எம்டிஎப் பலகைகள், கொப்பரா, சத்திரசிகிச்வைக் கையுறைகள், உறுதியான இறப்பர் வகை, சுத்திகரிக்கப்பட்ட இறப்பர் என்பனவும் உள்ளடங்குகின்றன.

°SFTA இன் கீழ், இலங்கையானது பாகிஸ்தானிலிருந்து 6,000 மெ.தொ. வருடாந்த பஸ்மதி அரிசிக் கோட்டாப் பங்கினை இறக்குமதி செய்வதற்கு உடன்பட்டுக் கொண்டது. 2020 இன் கோட்டாப் பங்கு தொடர்பில், அமைச்சரவையானது அரச வர்த்தக கூட்த்தாபனத்தின் மூலம் கோட்டாப் பங்கினை இறக்குமதி செய்வதற்கு 22020.11.18 ஆம் திகதிய 20/1878/313/020-I ஆம் இலக்கம் கொண்ட அமைச்சரவைப் தீர்மானத்தினுடாக அங்கிகாரத்தினை வழங்கியுள்ளது. அங்கீகாரமானது 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரிய கோட்டாப் பங்கினை 2021 இல் சேர்த்தே இறக்குமதி செய்வதற்கும் வழங்கப்பட்டிருந்தது.

சுங்கத் தணைக்களத்தின் உதவகையுடன் பாகிஸ்தானுக்கு மூன்றாம் நாட்டு புளி ஏற்றுமதி செய்யப்படுவதனை நிறுத்துவதற்கு வர்த்தக திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான் இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் 12 ஆவது

அமர்வினை நடாத்துவதற்கான தயார்ப்படுத்தல்கள் குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டின் 01 ஆவது காலாண்டில் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவினை நடாத்துவதற்கான செயல்திட்டமொன்றினை விருத்தி செயவதன் மூலம் அதனை முன்னெடுக்கவும்திட்டமிடப்பட்டிருந்தது.

I. இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (SLSFTA) 2018.01.23 ஆம் திகதியன்று வலுவுக்கு வந்தது. SLSFTA ஆனது பொருட்கள், சேவைகள், முதலீடுகள், புலமைச் சொத்துக்கள், இ – வர்த்தகம், வர்த்தக வசதிப்படுத்தல்கள், அரசாங்க பெறுகைகள், பொட்டி மற்றும் பொருளதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பனவற்றினை உள்ளடக்குகின்றது.

SLSFTA இன் அமுலாக்கலின் பின்னர், பல்வேறு சிவில் சமுகங்களினால் பல்வேறு கருத்துரைகள் முன்வைக்கப்பட்டன. 2018.11.30 ஆம் திகதியன்று அத்தகைய கருத்துரைகளினைக் கவனத்தில் கொண்டு, அப்போதைய அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் SLSFTA இனை மதிப்பாய்வு செய்வதற்கு நிபுணர் குழுவொன்றினை நியமித்தார். 2018.11.30 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில், SLSFTA இனை கண்காணிப்பதற்கும் அமைச்சரவையின் முன் அங்கீகாரத்துடன் தேவையான திர்த்தங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதன்பின்னர், அப்போதைய அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சானது (MODSIT) 25 உரிய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து திருத்தங்களுக்கான 31 முன்மொழிவுகளினைப் பெற்றுக் கொண்டது. அதனைத் தொடர்ந்து, 5 உறுப்பினர்களினைக் கொண்ட அமைச்சரவை உப குழுவின் 2 ஆவது கூட்டம் 2019.10.15 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. SLSFTA இன் கூட்டுக் குழுவில் கலந்துரையாடலுக்காக 18 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டன.

SLSFTA ஆனது தற்போது வர்த்தக அமைச்சின் கீழ் வருவதால், மேற்படித் திருத்தங்கள் தொட்டர்பில் உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ளும் நோக்குடன் சிங்கப்பூருடன் பேச்சுவார்த்தைகளினை நடாத்துவதற்கும் இத்தகைய 18 உத்தேச திருத்தங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினைக் கோருவதற்கும் 2020.12.21 ஆம் திகதியன்று வர்த்தக திணைக்களமானது வரைபு அமைச்சரவை பத்திரமொன்றினைத் தயாரித்து சமர்ப்பித்துள்ளது.

அதே நேரத்தில், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட SLSFTA இற்கான 09 தனியான அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழக்குகளின்படி2020 நவம்பர் 3 ஆம் திகதியன்று உச்ச நீதிமன்றத்தினால் ஆதரவுக்காக நிலைநிறுத்தப்பட்டன. எவ்வாறாயினும், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொவிட் – 19 முடக்க நிலையானது அமுல்படுத்தப்பட்டமையால், வழக்கானது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதுடன் வழக்கானது 2021 இற்கு திகதி குறிப்பிடப்படும்.

I. ஏனைய உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான விருத்திகள்.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கையின் உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைளினைத் தொடர்ந்து வரும் தகுதி நிலை அறிக்கைகளினைத் தயாரித்து கௌரவ வர்த்தகம், நிதி மற்றும் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் பிராந்திய ஒத்துழைப்பு, ஜனாதிபதி செயலகம் மற்றும் உரிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சமர்ப்பித்துள்ளது.

- 2014 செப்ரெம்பர் 16 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் சீன – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSFTA) மற்றும் பேச்சுவார்த்தைகளின் 06 சுற்றுக்கள் என்பன நிறைவு பெற்றுள்ளன.

- 2016 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (நுவுஊயு) மற்றும் பேச்சுவார்த்தைகளின் 11 சுற்றுக்கள் நிறைவு பெற்றுள்ளன.

- 2017.06.02 ஆம் திகதியன்று முன்மொழியப்பட்ட இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (SLTFTA) 02 சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளன.

V. ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் வர்த்தக உறவுகள்

அ. இருதரப்பு வர்த்தகம்

ஐக்கிய இராச்சியம் உள்ளடங்கலான இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நீண்ட கால வர்த்தக மற்றும் பொருளாதார பங்காளர்களாக இருந்து வருகின்றன. இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கிடையிலான மொத்த வர்த்தகப் புரள்வானது 2015 இலிருந்து 2019 வரையில் நேர்வினையான வடிவில் இருந்துள்ளது. இலங்கைகும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குமிடையிலான மொத்த வர்த்தக புரள்வு 2018 இல் 5524 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி 0.40% இனால் குறைவடைந்தமையால் இது 2019 இல் 5503 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறைவடைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதியானது படிப்படியாக அதிகரித்த வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் தளம்பல் கொண்டவையாக அமைந்திருந்தன. வர்த்தக மீதியானது எப்போதும் இலங்கைக்குச் சாதகமாகவே அமைந்துள்ளது. எவ்வாறாயினும், பிரதானமாக உலகளாவிய ரீதியிலான கொவிட் 19 வைரஸ் நோய்த் தொற்று காரணமாக, ஐக்கிய இராச்சியத்தின் BREXIT இற்கான 2019 ஜனவரி – நவம்பர் வரை மற்றும் 2020 வரையிலான இலங்கையின் ஏற்றுமதிகள் 11.7% இனால் குறைவடைந்திருந்தது. தைத்த ஆடைகளானவை 2019 இல் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதியில் 61% பங்களிப்புச் செய்து முதன்மை இடத்தினை வகித்துள்ளது. 2020 இல் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏனைய ஏற்றுமதிகளில் ரயர்கள் (4.2%) தேயிலை (3.7%) புகையிலை (2.5%) என்பனவும் பங்களிப்புச் செய்துள்ளன. மோட்டார் கார்களின் இறக்குமதியானது இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் 9.5மூ இனை வகிப்பதுடன் இரும்புகளும்உருக்குகளும் (7.4%) கண் சத்திரசிகிச்சை உபகரணம் (5.8%) ஆகியன இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தான பிரதான இறக்குமதிகளாக அமைந்துள்ளன.

ஆ. EU GSP+ வரிச்சலுகைகளும் அதன் பயன்பாடும்.

இலங்கையானது 1971 இலிருந்து 2005 வரையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP திட்ட நியமங்களை பய்னபடுத்தியுள்ளது. 2005 இல் இலங்கையானது பொருளாதார ரீதியாக நலிவடைந்த அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆதரவளிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP வசதியினைப் பெறும் பயனாளியாக வந்துள்ளது. இந்த வசதியானது மனித உரிமைகள், தொழில் உரிமைகள் மற்றும் ஏனைய வலுவாதார அபிவிருத்தி மற்றும் முறையான கண்காணிப்புக்கான ஒத்துழைப்பினை வழங்குதல் என்பவை மீதான 27 ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைகளினை வினைத்திறனுடன் அமுலாக்கும் நோக்குடன் வழங்கப்படுகின்றது. 2010 ஆகஸ்டில், இலங்கையானது EU GSP + இனை இழந்துள்ளதுடன் 2017 மே வரையில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு GSP திட்ட நியமங்களின் கீழான பயன்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இலங்கையானது 2017 மே 19 ஆம் திகதியன்று GSP, இணை மீளவும் பெற்றுக் கொண்டது.

அது தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து EU GSP திட்டமானது, GSP இன் விலை போட்டித்தன்மை மற்றும் பயன்படுத்திய உற்பத்திப் பொருட்கள் என்பவற்றினை அதிகரிப்பதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதிகளினை விரிவாக்குவதற்கு கணிசமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளது. GSP வரிச்சலுகைகள் கடந்த ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி கூடையினை பல்வகைப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தன.

2018 இல், இலங்கையானது உலக வங்கியின் மொத்த தேசிய வருமான (GNI) கணிப்பீடுகளின்படி, மேல் நடுத்தர வருமானம் பெறும் நாடாக கருதப்பட்டுள்ள போதிலும், இலங்கையானது 2020 ஜூலையில் பிரசுரிக்கப்பட்ட GNI தரவின்படி, 2019 இல் மீளவும் கீழ் நடுத்தர வருமானம் பெறும் நாடாக வந்துள்ளது.

2010 இல் இலங்கையின் GSP+ பயன்பாட்டு வீதமானது 73% ஆக இருந்துள்ளதுடன் இது குறித்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய வீதசாரமாகவும இருந்துள்ளது. 2010 ஆகஸ்டிலிருந்து 2017 வரையில் புளூ நியமத்தின் கீழ் இருந்த ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 2.1 பில்லியனிலிருந்து 2.6 பில்லியன் யூரோக்களுக்கு அதிகரித்துள்ளது. 2011 இல் 66% ஆக இருந்த GSP பயன்பாட்டு வீதமானது 2017 இல் 55% இற்கு வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் இது 2018 இல் 58மூ ஆக காணப்பட்டுள்ளதுடன் 2019 இல் 63% ஆக அதிகரித்துள்ளது.

2013 தவிர ஏனைய ஆண்டுகளில் சராசரியாக காணப்பட்ட 2011 இலிருந்து 2017 வரையிலான ஏற்றுமதிகள் அதிகரித்துக்காணப்பட்டுள்ளதுடன் பயன்பாட்டு வீதாசாரமானது வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கை தொடர்பில் பொதுவாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன் 1990 களிலிருந்து 2010 வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் வளர்ச்சி மற்றும் அதிகரித்த GSP வரிச்சலுகைகள் என்பவற்றிற்கிடையே சாதகமான தொடர்பு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. தெதகைய சாதகமான தொடர்பானது 2017 இல் GSP+ இனை மீளப் பெற்ற பின்னரும் தொடருகின்றது.

GSP+ அண்மைய துறைசார் பயன்பாட்டு நியதிகளின்படி, கீழே காட்டப்பட்டவாறு, GSP+ பூச்சிய தீர்வையில் 7000 இற்கும் மேற்பட்ட உற்பத்தி வரிசைகளினைக் கொண்டிருந்த போதிலும், புளூ இன் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் ஒரு சில உற்பத்தித்துறைகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றன. தைத்த ஆடைகள் துறையில் குறைந்தளவான பயன்பாட்டிற்கான காரணம் தரிவுச் சலுகைகளின் பயன்களைப் பெறுவதற்காக மூலப் பகுப்பாய்வு விதிகளினைக் கடுமையாக கடைப்பிடித்தமையேயாகும்.

உற்பத்தித் துறை	பயன்பாட்டு வீதம் (2019)	குறிப்புக்கள்
அத்தியாயம் 61 மற்றும் 62- தைத்த ஆடைகள்	51.75%	நூலிலிருந்து துணிக்கு மற்றும் துணியிலிருந்து தைத்த ஆடை எனும் இரட்டை நிலை மாற்றத்திற்கு தேவையான முறையில் மூலவிதிகிளனை கடுமையாக்குதல்
இறப்பர் உற்பத்திகள்	96.38%	முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மூல விதிகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட மூல விதிகள்
மீன் உற்பத்திகள்	99.48%	முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள்
உண்ணத்தக்க தயாரிப்புக்கள்	96.92%	முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள்
சைக்கிள்கள்	96.32%	அதிகளவிலான "பெறுமதி சேர்க்கப்பட்ட " மூல விதிகள்"
தைத்த ஆடைகள் – துணை பொருட்கள்	77.58%	அத்தியாயம் 61 மற்றும் 62 இலுள்ள தைத்த ஆடைகளிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியாக குறைந்தளவில் மூல விதிகனளைக் கடுமையாக்குதல்
சாதனங்களும் துணைப் பொருட்களும்	41.28%	அதிகளவிலான "பெறுமதி சேர்க்கப்பட்ட " மூல விதிகள்"

பொம்மைகள்	86.94%	முழுமையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மூல விதிகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட மூல விதிகள்
	87.04%	அதிகளவிலான "பெறுமதி சேர்க்கப்பட்ட " மூல விதிகள்"
தேயிலையும் வாசனைத் திரவியங்களும்	73.99%	பெரும்பாலும் "முழுமையாக பெற்றுக் கொள்ளப்பட்ட" மூல விதிகள்.
சராசரிப் பயன்பாடு	63%	2018 இல; 58% இலிருந்து அதிகரிப்பு

GSP+ வரிச்சலுகையினை இலாபமீட்டும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கு இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதிகளையும் விரிவாக்க வேண்டியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் போக்கானது வளர்ந்து வருவதுடன் GSP இன் பயன்பாடானது குறைவடைந்தும் வருகின்றது. நாட்டின் ஏற்றுமதிகள் GSP+ இல் பெருமளவில் தங்கியிருப்பதில்லை என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. GSP + வரிச் சலுகைகளின்றி இலங்கையின் ஏற்றுமதிகள் இத்தகைய நிலையினை அடைய முடிந்திருப்பதானது ஒரு விரும்பத்தக்க அபிவிருத்தியாகும்.

ஆ. ஐரோப்பிய ஒன்றியத்தின் நலக்காப்பு முறை மற்றும் தாவரங்கள்தொடர்பான நலக் காப்புமுறை (SPS) மற்றும் வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் (TBT)

- **உணவு மறறும் விலங்குணவுக்கான துரித எச்சரிக்கை முறைமை (RASFF):**

RASFF என்பது ஐரோப்பிய ஒன்றியத்தினுள் உணவு பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து அறிக்கையிடுவதற்கான ஒரு அமைப்பு முறையாகும். இலங்கையிலுள்ள பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து கிடைக்கப் பெறும் RASFF எச்சரிக்கையினை பெறுவதற்கும் அவற்றிற்குப் பதிலளிப்பதற்கும் பொறுப்பு வாய்ந்த முகவராண்மைகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து 24 இணக்கமில்லா எச்சரிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ள நாட்டிலுள்ள சந்தையில் வைக்கப்பட்டுள்ள அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் அயல் நாட்டுக்குரிய எல்லையின் நுழைவாயிலில் ஐரோப்பிய ஒன்றியத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உணவு, விலங்குணவு இனிப்பு பிஸ்கற்றுக்கள், அரிசி, வெற்றிலை, மிளகாய், தகரத்திலடைக்கப்பட்ட மீன், மூலிகைகள் போன்றவற்றின் உணவு தொடர்பாடல் பொருட்களில் இடர்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாக 2020 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலுள்ள 15 எச்சரிக்கைகளுடன் ஒப்பிடுகையில் RASFF எச்சரிக்கைகளின் எண்ணிக்கையில் சிறியளவிலான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

- **தாவர அடிப்படையிலான ஒப்படைச் சரக்குகளின் மீதான இணக்கப்பாடில்லாத எச்சரிக்கைகள். (EUROHYT – ஐரோப்பிய தாவர சுகாதாரத்திற்கான ஐரோப்பிய தாவரங்கள் தொடர்பான துரித எச்சரிக்கை முறைமை):**

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையானது (NPQS) ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட EUROPHYT எச்சரிக்கைகளினைப் பெற்றுக் கொள்வதற்கும் பதிலளிப்பதற்கும் பொறுப்பு வாய்ந்த அரசாங்க நிறுவனமாக அடையாளங் காணப்பட்டுள்ளது. 2020 இல் EUROPHYT இன் கீழான தாவர அடிப்படையிலான ஒப்படைச் சரக்குகள் தொடர்பில் 85 இணக்கமில்லா எச்சரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. வர்த்தக திணைக்களமானது தேவையானபோது உரிய அரசாங்க நிறுவனங்களுடன் சுயுளுகுகு மற்றும் EUROPHYT எச்சரிக்கைகளுக்காக தனித்தனியான தரவு தளங்களைப் பேணி வந்துள்ளது.

- **சேதன உற்பத்தி மற்றும் சேதன உற்பத்திப் பொருட்களை லேபலிடுவது தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய ஒழுங்குவிதி**

ஐரோப்பிய ஒன்றியத்தினால் சேதனப் பொருட்களின் உற்பத்தி மற்றும் சேதன உற்பத்திப் பொருட்களின் லேபலிடுதல் மீதான ஒழுங்குவிதி 2021 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது. வர்த்தக திணைக்களமானது இலங்கையில் இப் புதிய ஒழுங்குவிதியின் தாக்கத்தினப் பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, விவசாயத் திணைக்களம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை தேயிலை சபை மற்றும் கட்டுப்பாட்டு சங்கம் – இலங்கை ஆகியவற்றின் பிரதான அக்கறைதாரர் முகவராண்மைகளுக்கிடையே தகவல்களைப் பரவச் செய்துள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை சேதன விவசாயிகள் சங்கம் என்பவற்றுடன் இணைந்து வர்த்தக திணைக்களமானது இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு ஒழுங்குவிதியின் தாக்கம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு சமர்ப்பித்தலினை மேற்கொண்டுள்ளது.

- **உயர் இடர் நிறைந்த தாவரங்கள், தாவர உற்பத்திகள் மற்றும் ஏனைய பொருட்கள் மீதான புதிய ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்குவிதி**

இத்தகைய ஒழுங்குவிதிகள் 2019 டிசம்பரிலிருந்து அமுலுக்கு வந்துள்ளன. ஜேளு தனியார் துறை ஏற்றுமதியாளர்கள் உள்ளடங்கலான அக்கறைதாரர்களின் இலங்கை விடயம் குறித்த ஆலோசனை தொடர்பான தொழில்நுட்ப தகவல் தரட்டு ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளது.

இ. ஐரோப்பிய ஒன்றிய இலங்கை முதலீட்டாளர் உரையாடல்

ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை முதலீட்டாளர் உரையாடலின் 10 ஆவது அமர்வு 2020 இன் ஆரம்பத்தில் நடாத்தப்பட வேண்டியருந்ததுடன் இதனை கைத்தொழில ' ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய முதலீட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட வரிவிதிப்பு, வெளிநாட்டுக் கம்பனிகளினைப் பதிவு செய்தல், கப்பல் மற்றும ' கேழ்வு அனுப்புதல், நிருமாணம், காணி சுவீகரிப்பு, பங்கு உரித்துடமை, தவணைக்கட்டணங்களைச் செலுத்தாமை, விசா தொடர்பான விடயங்கள், உணவு ஒழுங்குவிதிகள் போன்ற துறைகளில் 11 முதலீடு தொடர்பான பிரச்சனைகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் அடுத்த அமர்வில் இவை தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

வர்த்தக திணைக்களமானது முன்னாள் வளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்பட்ட போது ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை முதலீட்டளர் உரையாடலினை மீளவும் ஆரம்பிக்குமாறும் ஒருங்கிணைப்பு மையமாக சேவையாற்றுமாறும் 2020 நவம்பரில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, வர்த்தக திணைக்களமானது கவனத்தில் கொள்ளப்பட்ட பிந்திய இற்றைப்படுத்தல்களினைப் பெற்றுக் கொள்வதற்கு 11 பிரச்சனைகள் அடையாளங்கணப்பட்ட 14 அக்கறைதாரர் நிறுவனங்களுக்கு கடிதம் எழுதியுள்ளது. வர்த்தக திணைக்களமானது 05 நிறுவனங்களிடமிருத்து மாத்திரம் இற்றைப்படுத்தல்களினைப் பெற்றுள்ளது. வர்த்தக திணைக்களமானது 2020 டிசம்பர் 09 ஆம் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் வர்த்தக அமைச்சுக்கு மீளவும் வழங்கப்பட்டதுடன் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பான முதலீட்டு பிரச்சனைகளினை நேரடியாக கையாளும் வகையில் உரிய வரிசை அமைச்சிடம் அல்லது முதலீட்டுச் சபையிடம் கையளிப்பதா அல்லது உரிய விடயத்தினை தொடர்ந்தும் வர்த்தக திணைக்களமே முன்னடுப்பதா என்பது குறித்து வர்த்தக அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல்களினைக் கோரியுள்ளது. முதலீட்டுச் சபையானது எதிர்காலத்தில் இந்த நிகழ்வினை ஒழுங்கமைப்பதற்கான தனது விருப்பத்தினைத் தெரிவித்துள்ளது.

ஆ. நியாய வர்த்தக அபிவிருத்தி மீதான ஒத்துழைப்பு செயன்முறை (FoC)

2019 ஆம் ஆண்டில், வர்த்தக திணைக்களமானது, இலங்கை அரசாங்கத்தினை பிரதநிதித்துவப்படுத்தும் குழஊ மிதான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு வர்த்தக திணைக்களம் ஆலோசனை வழங்கியமையால் உத்தேச FoC இற்குப் பொருத்தமான வரைபொன்றினை தயாரிக்கும் நோக்கத்திற்காக இலங்கையின் உரிய அரசாங்க மற்றும் தனியார் துறையினருடன் உத்தேச ஒத்துழைப்பு செயன்முறை தொடர்பில் ஆலோசனைகளினை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், ஒத்துழைப்பு செயன்முறையின் நியதிகளினை மீளாய்வு செய்த பின்னர், நியாய வர்த்தக கட்டயம் மற்றும் சான்றுப்படுத்தல் செயன்முறை தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு, வர்த்தக திணைக்களமானது ஏற்றுமதி சந்தைக்கான இலங்கை சேதன உப துறைக்கு ஒத்திசைவான உப துறையொன்றினை விருத்தி செயவதுடன் தொடர்புடைய நியாய வர்த்தகத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் வர்த்தக திணைக்களத்தின் தொழிற்பாடுகளின் நோக்கெல்லையினுள் உள்ளடங்கவில்லையென்பது குறித்து அவதானித்துள்ளது.

எனவே, வர்த்தக திணைக்களமானது புருஸல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு குறித்த உத்தேச ஒத்துழைப்பு செயன்முறையில் கைச்சாத்திட முடியாடமைக்கான அதன் இயலாமை குறித்து அறிவித்துள்ளது. அதற்கிணங்க, சர்வதேச சந்தைகளுக்கான நியாய வியாபார உற்பத்திகளினை விருத்தி செய்தல் மற்றும் தேவையான லேபல்களினை இடுதல் போன்ற நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுடன் அடிமட்ட தொடர்பினைப் பேணி வருகின்ற ஏதேனும் அரச அல்லது தனியார் துறை நிறுவனமானது உத்தேச ஒத்துழைப்பு செயன்முறையில் கட்டாயம் கையெழுத்திட வேண்டுமென்பது வர்த்தக திணைக்களத்தின் நிலைப்பாடாகும்.

உ. ஐ.ஒ – இலங்கை வர்த்தகம் தொடர்பான உதவுகைக் கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது 2016.11.01 இலிருந்து 2020.10.31 வரையிலான 4 வருட காலப்பகுதிக்கென ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது 2021.02.28 ஆம் திகதி வரையிலான இன்னொரு 4 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் காலப்பகுதிக்குரிய மீளாய்வுக் கூட்டங்கள் தேசிய கருத்திட் அலுவலகத்தினூடாக (NPO) நடாத்தப்பட்டுள்ளதுடன் இரண்டு ஆண்டுகளுக்காரு தடவை நடாத்தப்படும் துரித கருத்திட்ட கூட்டங்கள் (PSC) திறைசேரியின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படுகின்றன. ஐரோப்பிய ஒன்றியமானது இக்கருத்திட்டத்திற்காக 8 மில்லியன் யூரோக்களை நிதியளித்துள்ளதுடன் சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் UNIDO என்பன இக்கருத்திட்டத்தின் அமுல்படுத்தும் முகவராண்மையாக செயற்பட்டு வருவதுடன் வர்த்தக திணைக்களமானது இக்கருத்திட்டத்தின் தேசிய இணைப்பாளராக செயற்பட்டு வருகின்றது.

இக்கருத்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி திட்டங்களில் சில பின்வருமாறு

- தேசிய ஏற்றுமதி உபாயத்தினை ஆரம்பித்தல் (NES)
- GSP+ வழிகாட்டு நூல்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரித்தல்.

- வர்த்தக கொள்கை, வர்த்தக பேச்சுவார்த்தைகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், வர்த்தக பரிகாரங்கள், SPS தொடர்பான பிரச்சனைகள் தொட்டர்பான பல்வேறு கருத்தரங்குகள் ∴ செயலமர்வுகளை நடாத்துதல்.

- தேசிய தர கட்டமைப்பு உபாயம் மற்றும் தேசிய பொதியிடல் பரிசோதனை நிலையம் போன்றவற்றினைத் தாபித்தல் மற்றும்

- இலங்கை கறுவா போன்றவற்றிற்கான GI இனைப் பெற்றுக் கொள்வதற்கு ஆதரவளித்தல்.

ஆ. இலங்கையிலிருந்து அலுமினிய உலோகத் தாள் மீதான ஐரோப்பிய மோசடி தவிர்ப்பு அலுவலகத்தின் விசாரணை

ஐரோப்பிய மோசடி தவிர்ப்பு அலுவலகமானது (OLAF) ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கையிலிருந்தான அலுமினிய உலோகத்தாள்களின் (எச்எஸ் குறியீடு 760711) இறக்குமதிகளுக்கெதிரான விசாரணைகளினை ஆரம்பித்துள்ளதுடன் இலங்கையானது முதல் குற்றவாளியாக பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் சீனாவே முதல் குற்றவாளியாக சந்தேகிக்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட விடயத்தில், ழுடுயுகு ஆனது இலங்கையிலிருந்தான அலுமினிய உலோகத் தாள்களின் பிரதான ஏற்றுமதியாளராக அடையாளங் காணப்பட்டுள்ளது. OLAF ஆனது அப்போதைய கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளதுடன் வர்த்தக திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் என்பன இந்த விசாரணை தொடர்பில் ஏற்றுமதியாளருக்கு தமது ஒத்துழைப்பினை வழங்கியுள்ளன. இது தொடர்பில் வர்த்தக திணைக்களமானது குறித்த கம்பனியுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணியுள்ளதுடன் குறித்த கம்பனிக்கு உற்பத்தி நாட்டுச் சான்றிதழினை வழங்கிய வர்த்தக மன்றத்துடன் OLAF தொடர்பினை ஏற்படுத்தி குறித்த தகவல்களைக் கோரியுள்ளது.

VI. ஐக்கிய இராச்சிய உலகளாவிய தரிவுகள் (UKGT) மீதான இணையவழி பொதுமக்கள் உசாவுதல் மற்றும் புதிய ஜீஎஸ்பி திட்டம் மீதான ஐக்கிய இராச்சிய விரிவாக்கப்பட்ட சட்ட ரீதியான உடன்படிக்கை தொடர்பான விடயங்கள்

2020 மார்ச்சில் ஐக்கிய இராச்சியத்தின் டீசுநுஒஐவு இனைத் தொடர்ந்து, ருமுபுவு மீதான புதிய இணையவழி மதிப்பாய்வொன்று நடாத்தப்பட்டதுடன் வர்த்தக திணைக்களமானது அரச துறை நிறுவனங்கள், வர்த்தக மன்றங்கள் மற்றும் இது தொடர்பான ஏற்றுமதி துறைகள் என்பவற்றுடன் கலந்துரையாடியுள்ளது. இலங்கையின் ஏற்றுமதித் துறை பின்னூட்டியானது பிரதானமாக தைத்த ஆடைகள், தேயிலை, இறப்பர், வாசனைத் திரவியங்கள், தெங்கு, மீன்பிடி உற்பத்திகள், பீங்கான பொருட்கள், உணவு மற்றும் மென்பானங்கள் என்பவை தொடர்பிலேயே கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவை ஐக்கிய இராச்சியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2020 மே மாதத்ததில், இலங்கையின் நலன்கள் குறித்த பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதான இரண்டு அறிக்கைகள் ஐக்கிய இராச்சியத்தினால் வெளியீடு செய்யப்பட்டன. 2020 இன் இரண்டாவது அரையாண்டில், இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிராலயத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, ஐக்கிய இராச்சிய அதிகாரிகள் 2021 ஜனவரி 01 இலிருந்து ஐக்கிய இராச்சிய சந்தையில் EU GSP+ அதே முன்னுரிமை முறைகளினை பெறுவதற்கு இலங்கை தொடர்ந்து முயற்சி செய்து வரும; UK GSP மீதான அதன் சட்டரீதியான வசதியினை அதிகரிப்பதாக உறுதியளித்துள்ளார்கள்.

வர்த்தக திணைக்களமானது ஐக்கிய இராச்சியத்தின் UK GSP திட்டத்தின் கீழ் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான விசேட தொழில்நுட்ப வழிகாட்டுதல்களினை வழங்கும் அதேவேளையில், வர்த்தக திணைக்களமானது முன்னணி வர்த்தக மன்றங்கள் மற்றும் உற்பத்தி சங்கம் என்பன உள்ளடங்கலான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையில் மின்னஞ்சல் பிரச்சார சுற்றுக்களை மேற்கொண்டுள்ளது. இவற்றுள் மூல விதிகள் மீதான பிரதான தொழில்நுட்ப விளக்கங்கள், பிராந்திய மற்றும் இருதரப்பு சேர்க்கைகள், GSP படிவம் அ இனைப் பயன்படுத்தி உற்பத்தி நாட்டுக்கான சான்றினை வழங்குதல் அல்லது மூலக் கூற்றின் சுய வெளிப்படுத்துகை என்ற வகையில் பதிவேடுகளினை எவ்வாறு பேணுவது மற்றும் வர்த்தக திணைக்களத்துடன் எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படுவது போன்றவை உள்ளடங்கலான ஐக்கிய இராச்சியத்தின் புதிய GSP இன் விதித்துரைத்த நடைமுறை அம்சங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

VII. இலங்கை மற்றும் வியட்னாமுக்கிடையில் நீடிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய மூலவிதிகளுக்கான முன்மொழிவுகள்.

இலங்கை மற்றும் வியட்னாமுக்கிடையிலான வர்த்தக உப குழுவின் 2 ஆவது கூட்டத்தின் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதால், ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான தைத்த ஆடைகளினை தயாரிப்பதற்கு இலங்கையினால் துணி வழங்கப்பட்ட வியட்னாம் தரப்பு துணி வளத்திற்கு அதன் நீடிக்கப்பட்ட தரண்ட வசதிக்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விண்ண்ப்பிபதற்காக வியட்னாமிய புடவைகள் மற்றும் தைத்த ஆடைகள் சங்கத்தின் (VITAS) ஆதரவினைக் கோரும் கூட்டு தைத்த ஆடைகள் மன்றத்தினால் (JAAF) முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. துயுயுகு ஆனது இலங்கை மற்றும் வியட்னாமுக்கிடையில் நீடிக்கப்பட்ட சேர்க்கையனைது வியட்னாமிய மூல துணிகளுக்கான EU GPS+ வரிச் சலுகையின் பயன்பாட்டு வீதத்தினைஅதிகரிப்பதனூடாக தைத்த ஆடைகளின் பெறுமதியினை அதிகரிப்பதற்கு கணிசமானளவு பங்களிப்பினை வழங்கும்..

VIII. புதிய ஜப்பான் GSP- திட்டத்தின் கீழான இலங்கையின் சமர்ப்பிப்பு

2021 மார்ச்சில் அமுல்படுத்தப்பட வேண்டிய புதிய ஜப்பான் GSP திட்டத்திற்கு இணையாக ஜப்பானிய அதிகாரிகளுக்கு எழுத்து மூலமான முன்மொழிவொன்றினை 2020 ஆகஸ்ட் 25 ஆம் திகதியன்று வர்த்தக திணைக்களம் முன்வைத்தது. வர்த்தக திணைக்களமானது அரசாங்க – தனியார் அக்கறைதாரர்களுடன் உசாவுகையினை மேற்கொண்ட வர்த்தக திணைக்களம் புடவைகள் மற்றும தைத்த ஆடைகைள், தேயிலை, மீன்பிடி மற்றும் உணவு பதப்படுத்தல் ஆகிய 04 துறைகளுக்காக பிரதானமாக முன்மொழிவுகளினைப் பெற்றிருந்தது. முன்மொழிவானது ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

VIII. இலங்கை அவுஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கை

அதிகரித்த வர்த்தகம் மற்றும் முதலீடு என்பவற்றிலிருந்தான பரஸ்பர நன்மைகளின் அடிப்படையில் இருதரப்பு பொருளாதார உறவுகளினை விரிவாக்கும் நோக்குடன் அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை என்பன 2017 இல்ல் வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கையொன்றில் (TIFA) கைச்சாத்திட்டுக் கொண்டன. TIFA இன் இரண்டாவது கூட்டம் 2019 இல் கொழும்பில்

நடாத்தப்பட்டதுடன் இரண்டு தரப்பு முன்மொழிவுகளினையும் கூட்டிணைத்து 2020 - 2021 இற்கான செயல்திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயல்திட்ட அமுலாக்கமானது வேறுபட்ட அமைச்சுக்களுக்கிடையில் வுஜகுயு இன் இலங்கை கேந்திர நிலையமானது மாறியதன் காரணமாக இடம்பெறவில்லை. இந்த வுஜகுயு இன் புதிய கேந்திர நிலையமான வர்த்தக தினைக்களம் இலங்கை வரிவை அமைச்சுக்களிலிருந்து சில புதிய முன்மொழிவுகளினைப் பெற்றுக் கொண்டுள்ளது. கூட்டான முன்மொழிவுகள் அங்கீகாரத்திற்காக வர்த்தக அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.5.3 பிராந்திய அலுவல்கள் பிரிவு

I. சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)

SAPTA இன் அங்கத்துவ நாடுகளாக பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை என்பன விளங்குகின்றன. SAPTA ஆனது 1993 ஏப்பிரல் 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டு 1995 டிசம்பர் 7 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. SAPTA ஆனது தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் (SAFTA) அமுலாக்கத்துடன் வேறொரு நிலைக்கு வந்துள்ளது. இதனால், SAPTA இன் கீழான தரிவு முன்னுரிமைப் பயன்பாடானது படிப்படியாக குறைவடைந்துள்ளது.

SAPTA இன் கீழான இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதியானது, 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 0.78 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்துள்ளது. இது 2019 இஇல் 1.75 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது. 2020 இல் ளுயீவுயு இன் கீழான பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக முலாமிடப்பட்ட இறப்பர் பொருட்கள், முதன்மை வடிவங்கள் இயற்கை இறப்பர், முடிச்சு துணிகள், பசை அடிப்படையிலான ஒட்டுப் பொருட்கள் என்பன இருந்துள்ளன.2020 இல் SAPTA இன் கீழான இலங்கை இறக்குமதிப் பொருட்களின் பெறுமதி 0.12 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்துள்ளது. இது 2019 இல் காணப்பட்ட 0.11 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் சிறியளவு அதிகரிப்பாகும்.

I. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான உடன்படிக்கை (SAFTA)

SAFTA இன் அங்கத்துவ நாடுகளாக ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை என்பன விளங்குகின்றன. SAFTA ஆனது இஸ்லாமபாத்தில நடாத்தப்பட்ட 12 ஆவது சார்க் மாநாட்டின் போது 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டதுடன் 2004 ஜனவரி 1 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது.

SAFTA கட்டம் - III இன் கீழான நெகிழ்வுப் பட்டியல்களின் குறைப்பு உள்ளடங்கலான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நேபாளம், காத்மண்டுவில் 2020 பெப்ரவரி 19 – 20 வரையில் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 10 ஆவது SAFTA நிபுணர் குழுக் கூட்டம் (COE) ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இரத்துச் செய்வதற்கு முன்பாக, ஆயத்த கூட்டமொன்று 10 ஆவது SAFTA நிபுணர் குழுக்

கூட்டத்தில் (COE) இலங்கையின் நிலைப்பாட்டினை வகுப்பதற்கு 2020 பெப்ரவரி 13 மற்றும் 26 ஆம் திகதிகளில் வெளிநாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டத்தில் வர்த்தக திணைக்களமானது SAFTA தொடர்பான விடயங்களை உறுப்னர்களுடன் இற்றைப்படுத்திக் கொண்டது. SAFTA கட்டம் - III இன் கீழான நெகிழ்வுப் பட்டியல்களின் குறைப்பு உள்ளடங்கலான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

நேபாளம், காத்மண்டுவில் 2020 பெப்ரவரி 19 – 20 வரையில் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 10 ஆவது SAFTA நிபுணர் குழுக் கூட்டம் (COE) ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இரத்துச் செய்வதற்கு முன்பாக, ஆயத்த கூட்டமொன்று 10 ஆவது SAFTA நிபுணர் குழுக் கூட்டத்தில் (ஊழுஞு) இலங்கையின் நிலைப்பாட்டினை வகுப்பதற்கு 2020 பெப்ரவரி 13 மற்றும் 26 ஆம் திகதிகளில் வெளிநாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு அரசாங்கங்களுக்கிடையிலான கூட்டத்தில் வர்த்தக திணைக்களமானது SAFTA தொடர்பான விடயங்களை உறுப்னர்களுடன் இற்றைப்படுத்திக் கொண்டது.

SAARC நாடுகளின் வர்த்தக உத்தியோகத்தர்கள் ஏப்பிரல் 08 ஆம் திகதி புதன்கிழமையன்று காணொளி மாநாடொன்றினை நடாத்தியுள்ளதுடன் அதில் தற்போது நிலவும் சூழ்நிலைகளின் கீழ் பிராந்தியங்களுக்கிடையில் வர்த்தக வசதிப்படுத்தல்களினை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து ஆராயப்பட்டது. வங்கி உத்தரவாதத்துடன் ஸ்கான் பண்ணப்பட்ட பிரதிகள் / டிஜிரல் முறையில் கையெழுத்திட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் சமர்பித்தல் மீதான முன்னுரிமை இறக்குமதிகளின் தற்காலிக அகற்றுகை, வங்கி உத்தரவாதம் போன்ற பொருத்தமான நிபந்தனைகளுடன் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் கடந்தகால சமர்ப்பித்தல்களுக்குட்பட்டு முன்னுரிமைத் தீர்வையில் இறக்குமதிகளின் தற்காலிக அகற்றுகை, வங்கிகளினால் கொடுப்பனவுகளின் விடுவிப்புக்காக ஆவணங்களின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதிகளினை தற்காலிகமாக ஏற்றுக் கொள்வது போன்ற விடயங்கள் இந்த காணொளி மாநாட்டில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களாகும்.

SAFTA இன் கீழான இலங்கையின் வர்த்தகமானது குறைக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தகமானது இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற சார்க் பிராந்தியத்திலுள்ள பிரதான வர்த்தகப் பங்காளிகளுடனான இரண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் பெரும்பாலும்நடாத்தப்படுகின்றது.

SAFTA இன் கீழான இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதியானது 2020 இல் 42.25 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்திருந்ததுடன் 2019 இல் இது 55.93 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்திருந்தது. 2020 இல் SAFTA இன் கீழான பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக மிளகு, உலர்த்திய தேங்காய், அலுமினிய கொள்கலன்கள், சாதிக்காய், சோளம், தேயிலை, புடவை உற்பத்திகள், கண்ணாடி போத்தல்கள், கடதாசி பலகை லேபல்கள், கையுறைகள் போன்றவை விளங்கியுள்ளன. SAFTA இன் கீழான இலங்கையின் இறக்குமதிப

பெறுமதியானது 2020 இல் 13 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்துள்ளதுடன் 2019 இல் இது 6.39 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது.

ஐ. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

முன்னர் பாங்கொக் உடன்படிக்கையென குறிப்பிடப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA), ஆசிய மற்றும் பசுபிக்குக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் (ருே-நுளுஊயீ) ஆரம்பிக்குகையாக 1975 இல் கைச்சாத்திடப்பட்டது. பங்களாதேஸ், சீனா, இந்தியா, கொரியக் குடியரசு, Lao PDR, மொங்காலியா மற்றும் இலங்கை என்பன இந்த உடன்படிக்கையின் தற்போதைய பங்குபெறும் நாடுகளாகும்.

APTA இன் கீழ், இதுவரையில் 04 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளதுடன் பங்குபெறும் நாடுகளினால் 10,461 தரிவு வரிசைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து வர்த்தக திணைக்களமானது நிலையியல் குழுக் கூட்ட அமர்வுகள் (SC) (பொருட்களின் வர்த்தக பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக) மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழுக் கூட்டங்கள், வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் யீவுயு பேச்சுவார்த்தைகளின் 05 ஆவது சுற்றுப் பேச்சவார்த்தைகளின் கீழான மூல விதிகள் தொடர்பான சேசுவார்த்தைகளிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

2020 பெப்ரவரி 03 இலிருந்து 05 வரை தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நிலையியல் குழுவின் 57 ஆவது கூட்டம் மற்றும் யீவுயு இன் 06 ஆவது தொழிற்படு குழுக் கூட்டம் என்பன காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

மொங்கோலியாவானது 2020.09.29 ஆம் திகதியன்று ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் (APTA) ஏழாவது உறுப்பு நாடாக உத்தியோகபூர்வமாக வந்ததையடுத்து தாய்லாந்தின் பாங்கொக் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் மாநாட்டு நிலையத்தில் வைபவமொன்று நடாத்தப்பட்டது. இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் மீன்பிடி, பழங்கள், வாசனைத் திரவியங்கள், பழங்கள், கனிப்பொருட்கள், மரத்தளபாடங்கள், மேசைப் பொருட்கள், நூல், துணிகள் மற்றும் முத்துக்கள் உள்ளடங்கலான 386 தரிவு வரிசைகள் உள்ளடங்கலான மொங்கோலியாவினால் வழங்கப்படவுள்ள ஆரம்ப வரிச் சலுகைகளினை பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். மாறாக, பங்களாதேஸ் மற்றும் Lao PDR போன்ற APTA இன் ஏனைய குறைவிருத்தி நாடுகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட மொங்கோலிய தரிவு வரிசைகளினை விரிவாக்கும் செயல்முறையில் இலங்கையானது ஈடுபட்டு வருகின்றது.

APTA இன் கீழான இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதியானது 2020 இல் 205.29 மில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன் இது 2019 இல் 179.70 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்துள்ளது. இது அதிகரித்த போக்கினைக் காட்டுகின்றது. 2020 இல் யீவுயு இன் கீழான பிரதான ஏற்றுமதிகளாக தேயிலை, தெங்கு, அபாகா, முனைப்பாக்கப்பட்ட காபன், தென்னந் தும்பு, தைத்த ஆடைகள், இறப்பர் கையுறைகள், இயற்கை இறப்பர், உடனடித் தேயிலை, பயன்படுத்தப்பட்ட காற்றடைக்கப்பட்ட ரயர்கள், மரக் கரி, புடைவையினாலான பொருட்கள் மற்றும் மீன்பிடி உற்பத்திகள் போன்றவை காணப்பட்டன. APTA இன் கீழான இலங்கை ஏற்றுமதிகளின்

பெறுமதியானது 2019 இல் 19.88 மில்லியனிலிருந்துள்ளதுடன் இது 2020 இல் 20.51 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது.

II. வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் வியாபார வாய்ப்புக்களை விருத்தி செய்யும் நோக்குடன் UNCTAD இனால் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை தொடர்பான உடன்படிக்கையானது,1989 ஏப்பிரல் 19 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. GSTP ஆனது 42 உறுப்பு நாடுகளினைக் கொண்டுள்ளது.

இதுவரையில் GSTP இன் பங்குபெறும் உறுப்பினர்களுக்கிடையே வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் மூன்று சுற்றுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

GSTP இன் கீழான இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதியானது 2020 இல் 89.54 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்துள்ளது. GSTP இன் கீழான மொத்த ஏற்றுமதிகளில் 86.35% இனைப் பெற்று கறுவா முதன்மை இடத்தினை வகித்துள்ளது. அதனைத் தொடர்ந்து அலுமினிய சுருள்கள், பீப்பாய்கள், கொள்கலன்கள், பெட்டிகள் மற்றும் அதனையொத்த கொள்கலன்கள் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்கள் விளங்குகின்றன. GSTP இன் கீழான இலங்கை இறக்குமதிகளின் பெறுமதி 0.17 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதிவு செய்துள்ளதுடன் இது 2019 இல் 0.03 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது.

III பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்களா விரிகுடா ஆரம்பிக்குகை (BIMSTEC)

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்களா விரிகுடா ஆரம்பிக்குகையானது (BIMSTEC) பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியான்மார் மற்றும் தாய்லாந்து உள்ளடங்கலான 07 உறுப்பு நாடுகளினைக் கொண்ட பிராந்திய நிறுவனமாகும். 2004 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று சட்டரீதியான உடன்படிகை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட BIMSTEC சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) பேச்சுவார்த்தைகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

BIMSTEC FTA இன் கீழான "பொருட்களின் உற்பத்தி நாட்டினை நிர்ணயிப்பதற்கான விதிகள், மற்றும் "மூல விதிகளுக்கான தொழிற்பாட்டுச் சான்றுப்படுத்தல் நடைமுறைகளின் வரைபு மீதான அவதானங்கள் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

2020 மே 20 ஆம் திகதி 22 ஆவது வர்த்தக பேச்சுவார்த்தைகள்குழுவிற்காக திட்டமிடப்பட்ட மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் 2020 ஜூன் 08 ஆம் திகதியன்று நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ROO மீதான BIMSTEC தொழிற்படு குழுவின் 12 ஆவது கூட்டம் என்பன நடாத்தப்பட்டிருக்கவில்லை.

IV. இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு (IORA)

இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பானது இந்தியப் பிராந்தியத்தினுள் பிராந்திய ஒத்துழைப்பினை வலுவூட்டுவதனையும் நிலையான அபிவிருத்தியினை உறுதி செய்வதனையும்

நோக்காகக் கொண்ட அரசாங்க நிறுவனங்களுக்கிடையிலான ஓர் அமைப்பாகும். இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பானது 21 உறுப்பு நாடுகளினைக் கொண்டுள்ளது.

வர்த்தக திணைக்களத்தின் சிரேஸ்ட மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவர் மொரிசியஸில் 2020 ஜனவரி 30 – 31 ஆம் திகதி வரையில் உள்ளக பிராந்திய வர்த்தக மற்றும் முதலீட்டினை விரிவாக்குவதற்கான IORA ஏற்றுமதி கூட்டத்தில் பங்குபற்றியுள்ளார். தொழிற்படு திட்டம் தொடர்பான விடயங்கள்: கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழு தொடர்பில் அதிகம் கலந்துரையாடப்பட்டது..

V. வர்த்தக மற்றும் முதலீட்டுக்கான பொதுநலவாய இணைப்பு நிகழ்ச்சிநிரல்

2018 ஏப்பிரலில், பொதுநலவாய அரசாங்க தலைவர்கள் கூட்டத்தில் (CHOGM) தலைவர்கள் வர்த்தக மற்றும் முதலீட்டு இணைப்புக்கான பொதுநலவாய இணைப்பு நிகழ்ச்சி நிரலினைப் (CCA) பின்பற்றியிருந்தார்கள். ஊஊயு ஆனது பொதுநலவாயத்திற்கப்பால் வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் பொதுநலவாய உறுப்பினர்களுக்காக புதிய அணுகுமுறையினை வழங்கி வருகின்றது. 2030 இல் 2 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பொதுநலவாய வர்த்தகத்தினை வளர்ச்சிடையச் செய்தல் முதலீடுகளினை விரிவாக்குதல் என்பன செயன்முறையிலுள்ளன. பொதுநலவாயமானது 53 உறுப்பு நாடுகளினைக் கொண்டுள்ளது.

இலங்கையானது 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் CCA இன் கீழான நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்குபற்றியது. வர்த்தக திணைக்களமானது இலண்டனில் 2020 பெப்ரவரி 17 – 19 வரையில் நடாத்தப்பட்ட பொதுநலவாய இணைப்பு நிகழ்ச்சிநிரலின் கீழ் இணைப்புக் கொத்தணி வாரம் – 2 இல் பங்குபற்றுவதற்கு இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து இரண்டு சிரேஸ்ட உத்தியோகத்தர்களுக்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டது.

இந்தத் திணைக்களமானது இணைய மூலமான மதிப்பாய்வுகளையும் பூர்த்தி செய்திருந்தது

- இலங்கை மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் அளிக்கப்பட்ட தகவல்களுடனான 'SMART மீன்பிடி".
- இலங்கை விவசாயத் திணைக்களத்தினால் அளிக்கப்பட்ட தகவல்களுடனான 'SMART விவசாயம்".
- இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவுகையுடன் "பொதுநலவாயத்தில் சிறந்த ஒழுங்குமுறையிலான நடவடிக்கைகள்"
- மதிப்பாய்வினைப் பூர்த்தி செய்யுமாறு அவர்களினைக் கோருகின்ற இத்திணைக்களத்தினால் இலங்கையில் வர்த்தக மன்றங்கள் மற்றும் உற்பத்தி சங்கங்கள்உள்ளடங்கலான தனியார் துறைக்கிடையே பகிரப்பட்ட பொதுநலவாய

வியாபாரங்களுக்கிடையிலான வலையமைப்புக்கள் தொடர்புகளை விரிவாக்குவதனை நோக்காகக் கொண்ட "தனியார் துறை மதிப்பாய்வு".

1.5.4 வர்த்தக ஊக்குவிப்பு பிரிவு

I. வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தகசார் பிரதிநிதித்துவமானது வெளிநாடுகளிலுள்ள 30 தூதரங்களில் 32 உத்தியோகத்தர்களினைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் விசேட கவனம் செலுத்துவதுடன் அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களினை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் பிரதான தொழிற்பாடுகள் பின்வருவனவற்றினையும் உள்ளடக்குகின்றன.

- இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களினை இனங்காண்பதற்காக சந்தைமதிப்பாய்வுகள் / புலனாய்வுகள் என்பவற்றினை மேற்கொள்ளுதல்

- அனுசரணை வழங்கும் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள், குறிப்பாக, தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்.

    - அனுசரணை வழங்கும் நாட்டின் இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகளினைப் பேணும் அதேவேளையில் பரிகார நடவடிக்கைக்கான பரிந்துரைகள் உள்ளடங்கலாக அனுசரணை வழங்கும் நாட்டின் கொள்கை மாற்றங்கள் குறிப்பாக தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்.

    - இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படும் தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகளின் எதிர்வினையான தாகக்த்தினைக் குறைப்பதற்காக அனுசரணை வழங்கும் நாட்டிற்குப் போதுமான பிரதிநிதித்துவத்தினை வழங்குதல்.

    - முக்கியமான சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் / நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல்.

    - B2B கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் இலங்கையில் நடாத்தப்படும் கண்காட்சிகள் / நிகழ்வுகளினைப் பார்வையிடுவதற்கும் உள்வரும் தூதுக்குழுக்களை ஏற்பாடு செய்தல்.

    - அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கை தொடர்பான ஊக்குவிப்பு (தனியொரு நாடு) நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.

    - இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் அவ்வாறே வியாபார மற்றும் முதலீட்டு (கூட்டு முயற்சி) வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.

- வர்த்தகம் மற்றும் முதலீட்டு (கூட்டு முயற்சி) வாய்ப்புக்களைக் சார்ந்த வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்.

- அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுடன் வலையமைப்பினைப் பேணுதல் மற்றும் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடரபுடைய விடயங்கள் / பிரச்சனைகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட அரசாங்க மற்றும சர்வதேச நிறுவனங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

- வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய விசாரணைகளினை மேற்கொள்ளுதல், வெளிநாட்டு வியாபாரங்கள் தொடர்பில் கூட்டங்களை நடாத்துதல் / விஜயங்களை மேற்கொள்ளுதல், இலங்கை எற்றுமதியாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவுகையினை வழங்குதல், வர்த்தக பிணக்குகளினைத் தீர்ப்பதற்குத் தேவையான உதவுகையினை வழங்குதல்.

- வெளிநாட்டுச் சந்தைகளில் பொருட்கள் / பண்டப் பெயர்களினைப் பதிவு செயவதற்கு ஏற்றுமதியாளர்கள் / தயாரிப்பாளர்களுக்கு உதவியளித்தல்..

- இலங்கையிலிருந்தான ஏற்றுமதி ஒப்படை சரக்குகளின் விடுவிப்பினை வசதிப்படுத்தும் பொருட்டு இறக்குமதி செய்யும் நாட்டின் சுங்க / உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணுதல்.

- உற்பத்திப் பொருள் விருத்தி, தொழில்நுட்பம், பொதியிடல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்றவை தொடர்பான அறிவினை பெற்றுக் கொள்ளும் / விரிவாக்குவதற்கான திறன் கட்டியெழுப்புதல் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொள்வதற்கான இலங்கை தயாரிப்பாளர்கள் / பயிற்சி செய்கையாளர்களுக்கான வெளிநாட்டு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- பொருட்கள் மற்றும் சேவைகளின் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் வியாபாரத்தினைப் பாதிக்கும் கொள்கை விடயங்கள் தொடர்பான சுருக்க விளக்கவுரைகள் / உள்ளீடுகளினைத் தயாரித்தல்.

- இறக்குமதி செய்யும் நாடுகளினால் ஆரம்பிக்கப்பட்ட குவிப்பெதிர்ப்பு விசாரணைகளுக்கு அவர்களின் உற்பத்திப் பொருட்கள் உட்படுகின்ற போது பாதுகாப்பு பதில்களினை தொகுப்பதற்காகவும் அவர்களின் வழங்கல் தரப்பு தடைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக தனிப்பட்ட முறையில் ஏற்றுமதியாளர்களுக்கு சரியான முறையில் விதித்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் மதியுரைகளினை வழங்குதல்.

- வெளியக உறவுகள் அமைச்சின் "பொருளாதார ராஜதந்திரம்" எனும் தலைப்பின் கீழ், ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

- தொடர்புடைய அக்கறைதாரர்களுடனான ஒருங்கிணைப்புடன் உரிய அரசாங்க நிறுவனங்கள், வர்த்தக மன்றங்கள் மற்றும் வியாபாரப் பேரவைகளினால் ஆரம்பிக்கப்பட்ட ஏற்றுமதி, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

- வெளியக மூலவளங்கள் திணைக்களம் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் (சீனா/பெஜ்ஜிங் – இல்) ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தும் வகையில் வேலை மற்றும் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய உத்தியோகபூர்வ

அபிவிருத்தி உதவுகைகளினைக் (ODAs) கையாளுதல், அதற்குரிய நடவடிக்கைகளினை நெறிப்படுத்துதல்.

- அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவியளித்தல்.

வர்த்தக உத்தியோகத்தர்களினால் தற்போது பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வர்த்தகசார் பதவிகள்

பதவிகள் - வகையீடு I	**பதவிகள் - வகையீடு II**	**பதவிகள் - வகையீடு III**
I. பெல்ஜியம் / புருஸல்ஸ்	I. அவுஸ்திரேலியா / சிட்னி	I. பிரேஸில் / பிரேஸியா
II. இந்தியா / புதுடில்லி	II. கனடா / ரொரன்ரோ	II. எகிப்து / கெயிரோ
III. இத்தாலி / ரோம்	III. சீனா / பிஜ்ஜிங்	III. இந்தியா / சென்னை
IV. பாகிஸ்தான் / கராச்சி	IV. பிரான்ஸ் / பாரிஸ்	IV. இந்தியா / மும்பை
V. சிங்கப்பூர்	V. ஜேர்மனி / பிராங்போட்	V. சவூதி அரேபியா / ரியாட்
VI. சுவிற்சலாந்து / ஜெனிவா (சிரேஸ்ட)	VI. ஜப்பான் / ரோக்கியோ	VI. மலேசியா / கோலாலம்பூர்
VII. ஐக்கிய இராச்சியம் / இலண்டன் (சிரேஸ்ட)	VII. தென்கொரியா / சியோல்	VII. மொஸ்கோ / ரஸியா
VIII. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் / டுபாய்	VIII. சுவிற்சலாந்து / ஜெனிவா (கனிஸ்ட)	VIII. தென்னாபிரிக்கா / பிறீரொறியா
IX. ஐக்கிய அமெரிக்கா / வொஸிங்டன்	IX. ஐக்கிய அமெரிக்கா / லொஸ் ஏஞ்சல்	IX. சுவீடன் / ஸ்ரொக்கொல்ம்
		X. தாய்லாந்து / பாங்கொக்
		XI. துருக்கி / அனங்கார
		XII. ஐக்கிய இராச்சிம் / இலண்டன் (கனிஸ்ட)
		XIII. வியட்னாம் / `னாய்
		XIV. இந்தோனேசியா / ஜகர்த்தா.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொழிப்பு அட்டவணையில் தரப்பட்டுள்ளது

	செயற்பாடு	மொத்தமாக மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை
1	வியாபார ஒத்துப்போதல்களினை ஏற்படுத்துதல்	1310
2	வியாபார வலையமைப்பு அமர்வுகளினை நடாத்துதல்	114
3	இலங்கை வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் – வெளிநாடு	115
4	வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகள் / வர்த்தக சந்தைகள் என்பவற்றில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொள்ளுதல்	38
5	இலங்கையில் கண்காட்சிகள் / வர்த்தக சந்தைகளில் பங்குபெறுவதற்கு உள்வரும் கொள்வனவு தூதுக்குழுக்களை ஒழுங்கமைத்தல்	10
6	வர்த்தக முறைப்பாடுகள் குறித்து கவனம் செலுத்துதல்	121
7	வர்த்தக விசாரணைகளினை மேற்கொள்ளுதல்	2181
8	அனுசரணை வழங்கும் / ஏற்றுக் கொள்ளப்பட்ட நாடுகளில் இலங்கையின் கண்காட்சிகளினை ஊக்குவித்தல்	22
9	உள்ளார்ந்த வர்த்தக பங்காளர்கள் மற்றும் வர்த்தக மன்றங்களுடன் கூட்டங்களை நடாத்துதல்	1415
10	வர்த்தக கொள்கையுடன் தொடர்புடைய விடயங்களில் ஈடுபடுதல்	212
11	முதலீட்டுக் கருத்தரங்குகளினை நடாத்துதல்	68
12	முதலீட்டு முன்மொழிவுகளில் கலந்து கொள்ளுதல்	106
13	முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்	41

14	சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளினை ஒழுங்கமைத்தல்	140
15	வெளிநாட்டு சுற்றுலாத்துறை கண்காட்சிகளில் இலங்கை பங்குபெறுவதறைகு ஏற்பாடு செய்தல்	15
16	சந்தைப் புலனாய்வு அறிக்கைகளினை வழங்குதல்.	490

அ. வர்த்தக ஊக்குவிப்பு

குறித்த ஆண்டில் வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதான வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் கீழே நிரலப்படுத்தப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா

1. இலங்கையின் சிறிய நடுத்தர துறைகள் அவுஸ்திரேலிய வர்த்தக சமூகத்துடன் வலையமைப்பு கூட்டமொன்று பிரிஸ்பேனில் 2020 மார்ச்சில் நடாத்தப்பட்டது.

2. அவுஸ்திரேலிய – இலங்கை வர்த்தகப் பேரவையினை தாபிப்பதற்கான வியாபார வலையமைப்புக் கூட்டம் சிட்னியில் 2020 டிசம்பரில் நடாத்தப்பட்டது.

3. அவுஸ்திரேலியாவில் இலங்கையின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சந்தை விரிவாக்கம் தொடர்பான இணைய வழியிலான கருத்தரங்கொன்று 2020 ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் (SLEDB) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

4. அவுஸ்திரேலியாவுடனான கூட்டு ஒத்துழைப்புக்கான வர்த்தகச் சூழல் மற்றும் வாய்ப்புக்கள் குறித்து இணைய வழி மூலமான கருத்தரங்கொன்று இலங்கை வர்த்தக மன்றம் மற்றும் அவுஸ்திரேலியாவின் ஒரு சில வர்த்தக மன்றங்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

பெல்ஜியம்

1. இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளினை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் என்பன ஒன்றிணைந்து இலங்கை கம்பனிகளுக்காக மெய்நிகர் B2B கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

2. விவசாய உணவுத் துறையில் தொழில்நுட்ப, வியாபார மற்றும் முகாமைத்துவ புத்தாக்கம் என்பவற்றில் முன்னணி பங்காளராக விளங்கும் பெல்ஜிய உணவு கைத்தொழில் மற்றும் வக்ராலிம் கூட்டமைப்பினால் அனுசரணை வழங்கப்பட்ட மெய்நிகர் மாநாட்டுக்கான இலங்கையின் பங்குபற்றுதல் ஒருங்கிணைக்கப்பட்டது.

3. லக்ஸம்பேர்க்கில் நடாத்தப்பட்ட டிஜிரல் ICT வாரத்தில் இலங்கை பங்கு பெறுவதற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொண்டமை.

4. பெல்ஜியத்தில் Chez Yuman சுப்பர ' சந்தையில் இலங்கையின் சந்தை வியாபாரக் குறியினை ஆரம்பித்தல்

பிறேசில்

1. பிறேசில் மற்றும் சிலி ஆகிய நாடுகளின் வருங்கால இறக்குமதியாளர்களுக்கும் இலங்கையின் எற்றுமதியாளர்களுக்குமிடையில் எழுபத்தியொன்பது (79) மெய்நிகர் B2B கூட்டங்கள் நட்டாத்தப்பட்டன.

2. சாவோ பாலா வர்த்தக மன்றம், பொகொட்டா வர்த்தக மன்றம், உருகுவே வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றம் மற்றும் BRICS-PED வர்த்தக மன்ற கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

3. சாவோ பாலோ, சிலி, கொலம்பியா மற்றும் சுரிநம் என்பவற்றில் இலங்கை ஏற்றுமதியாளர்களின; Honorary Consuls உடன் நான்கு (4) வர்த்தக வலையமைப்பு அமர்வுகள் நடாத்தப்பட்டன.

4. பிறேசில் சந்தையினை அணுகுவதற்காக இலங்கை எற்றுமதியாளர்களுக்கான மெய்நிகர் சந்தை விழிப்புணர்வு இணைய வழி கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்தமை.

5. சாவோ பாலோ வர்த்தக மன்றம் மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் ஆகியவற்றின் உதவுகையுடன் 26 இலங்கை கம்பனிகளுக்கான மெய்நிகர் வர்த்தக ஒத்துப் போகும் நிகழ்வானது நடாத்தப்பட்டது.

சீனா

1. M/s Prestige International Ltd மற்றும் M/s Silver Mills Ltd, M/s Stuarts Tea SL Ltd, M/s Saraketha Organic Ltd ஆகியவற்றுக்கிடையில் மூன்று (03) உபாய ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

2. சீனாவிலுள்ள 07 இலங்கை கம்பனிகளின் பிரதிநிதிகளுடன் இணைப்பினை ஏற்படுத்தும் வகையில் சங்காய் எக்ஸ்போவில் இலங்கை பங்குபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

3. இலங்கை ஏற்றுமதிச் சபை மற்றும் சீன வங்கி என்பவற்றின் ஒருங்கிணைவுடன் 27 இலங்கை கம்பனிகளுக்கான B2B கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பிரான்ஸ்

1. 50 மீட்டர் அமெரிக்க டாலர் மதிப்புள்ள 100 மீட்டர் கேபிள் பழுதுபார்க்கும் கப்பலை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட கொழும்பு கப்பல்துறை பி.எல்.சி. ஆ ∴ ள ஆரஞ்சு மரைனுடன் ஒரு பெரிய நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் கப்பல் கட்டும் நிறுவனம்.

2. பிரெஞ்சு மீளப்பெயரிடப்பட்ட "லாகோஸ்ற்" உடன் 10 இலங்கை கம்பனிகளுக்கான மெய்நிகர் கூட்டங்கள் இலங்கை ஏற்றுமதி சபையின் ஒருங்கிணைவுடன் நடாத்தப்பட்டன.

2. "Global Apparel Sourcing Expo" இன் இணையவழியிலான B2B மேடையில் 6 இலங்கை கம்பனிகள் பங்கு பெறுவதற்கு இலங்கை ஏற்றுமதிச் சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

3. 3. இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் / புதிய கம்பனிகளுக்கான "உணவுத் துறையில் "பிரெஞ்சு வாங்குனர்களை எவ்வாறு அணுகுவது மற்றும் அவர்களை எவ்வாறு கையாள்வது" என்பது தொடர்பில் இணைய வழியிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று வர்த்தக தினைக்களம் மற்றும் CCI- பரிஸ் என்பவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜேர்மனி

1. அரச மற்றும் தனியார் துறை பங்குடமையினை உக்குவிப்பதற்காக கொழும்பில் ஜர்மு நிறுவனம் மற்றும் ஜேர்மனியில் சந்தை ஆலோசனைக் கம்பனி என்பவற்றுடன் மெய்நிகர் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

2. 2. நொரெம்பேர்க்கில் Dusseldorf and Biofach 2020 சர்வதேச படகுக் காட்சியில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை கம்பனிகளுக்காக

இந்தியா

1. 49 இலங்கை கம்பனிகளுக்காக இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களுடன் மெய்நிகர் B2B கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன..

2. 49 இலங்கை கம்பனிகளுக்காக இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களுடன் மெய்நிகர் B2B கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

3. Indusfood-Tech 2020" Trade Fair, SurajKundMela (International

Handicraft exhibition) மற்றும் FICCI LEADS 2020: "Reimagine the World" என்பவற்றில் இலங்கையின் பங்குபற்றலானது தேசிய கைப்பணி பேரவை மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

4. 4. இந்திய தொழில்நுட்ப நிறுவகத்திலிருந்து 03 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு EDEX Expo 2020 இல் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
5. 5. இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்திலிருந்து தூதுக்குழுவொன்று Medicare Colombo 2020 இல் பங்குபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
6. உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்சார துறையின் தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்காக ஏற்பாடு செய்யப்பட்ட "e-connect" மெய்நிகர் B2B நிகழ்வில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.
7. மெய்நிகர் டீ2டீ கூட்டங்கள் M/s Sanvic Global India Ltd, an Indian Company, மற்றும் M/S Adventis Lanka PLC and M/S Export Freight Lanka Ltd. ஆகியவற்றுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்டன.
8. 82 இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் மும்பாயிலுள்ள வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றத்தின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்யப்பட்ட "இந்திய சந்தைக்கு ஊக்குவிப்பதற்கு விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு துறைக்கான கூட்டு ஒத்துழைப்புக்கான இந்திய – இலங்கை நடைமுறை வியாபாரச் சூழல் மற்றும் வாய்ப்புக்கள்" எனும் தலைப்பில் இணைய வழி கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
9. BIMSTEC Expo 2020 மெய்நிகர் FMCG supply expo, Specialty Chem2020 Virtual Pune book fair, Ind-Texpo 2020 and FICCI Annual Expo 2020 ஆகியவற்றில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜப்பான்

1. தும்பு உற்பத்திகள், எலுமிச்சைப் புல் எண்ணெய், பிஸ்கற்றுக்கள், தேயிலை மற்றும் இரத்தினக்கற்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் ஈடுபடுகின்ற இலங்கை எற்றுமதியாளர்களுடன் பல்வேறு ஜப்பானிய கம்பனிகளினை இணைத்தமை.

2. IT Start-up WEBINAR இல் ஏறக்குறைய **50** பங்குபற்றாளர்களினைச் சந்திப்பதற்கு ஏழு **(07)** இலங்கை IT start-up கள் வசதிப்படுத்தப்பட்டன.

3. இலங்கை ஏற்றுமதிச் சபையுடன்இணைந்து இரண்டு **(02)** ஆயுர்வேத மற்றும் மூலிகைப் பொருட்கள் தொடர்பான இணைய வழியிலான கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டதுடன் ஜப்பானிய உள்ளார்ந்த வாங்குனர்களினை அணுகுவதற்கு **07** இலங்கை வழங்குனர்களுக்கு செயல்முறை விளக்கப் பொருட்கள் வழங்கப்பட்டன.

4. ஜப்பானில் இலங்கை கறுவா ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துரையாடலினை மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலுள்ள வாசனைத்திரவிய பேரவையுடன் இணையவழி கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

5. இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கிடையே ஜப்பான் GSP திட்டம் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு ஜப்பான் புளூ திட்டம் குறித்த வாய்ப்புக்கள் மற்றும்

வளங்கள் தொடர்பில் இணைய வழி கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

6. ஜப்பானுக்கான இலங்கையின் பரிசினை பொறுப்பேற்பது தொடர்பான 1 ஆவது இணையவழி கருத்தரங்கானது 60 இலங்கை கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டது. 2 ஆவது இணைய வழி கருத்தரங்கானது 2021 இன் முதலவாது காலாண்டில் நடாத்தப்படும்.

ஐக்கியஇராச்சியம்

1. SLEDB உடன் ஒருங்கிணைந்து இலங்கையில் தேங்காயப் பால், வனிலா மற்றும் சுவையூட்டிகளின் 05 ஏற்றுமதியாளர்கள் ∴ உற்பத்தியாளர்களுடன் முன்னணி உணவகங்கள் / ஹோட்டல்களுக்கு மூலப் பொருட்கள் மற்றும் ஏனைய உணவுப் பொருட்களை வழங்கும் ஐக்கிய இராச்சிய கம்பனியான M/s John Mower & Co இற்கான மெய்நிகர் B2B கட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

2. இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், மருந்தகங்கள், சுகாதார நலன் பேணல் கடைகள், மற்றும் மருத்துவ சாதனங்களுடன் தொடர்புடைய வர்த்தக மன்றங்கள் மற்றும் சங்கங்களின் உறுப்புரிமைக்கான NHS UK ,ற்கு PPE இனை வழங்குவதில் ஆர்வமுடைய 38 இலங்கை தைத்த ஆடைகள் கம்பனிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

3. மூலிகைகள் மற்றும் ஆயுர்வேத உற்பத்திப் பொருட்களை தயாரிக்கின்ற Nature's Beauty Creations Ltd, Link Natural Products Ltd, Bio Extracts (Pvt) Ltd, Siddhalepa Exports (Pvt) Ltd, Food & Nature (Pvt) Ltd and HDDES Extracts), Basillur Teas and English Tea Shop ஆகிய 08 இலங்கை கம்பனிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் Trading Director of major UK retailer Holland & Barrett உடன் கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

4. M/s Prime Trims London இற்கான கட்டளைகளினை (Lingerie and Hosiery உற்பத்திகள்) பூர்த்தி செய்வதற்கான உள்ளார்ந்த தயாரிப்புக்களினை கொண்டுள்ள 10 இலங்கை கம்பிகள் அறிமுகம் செய்யப்பட்டன. .

5. Sainsburys, Waitrose மற்றும் Tesco எனும் பெயரில் ஐக்கிய இராச்சியத்திலுள்ள மூன்று பிரதான சுப்பர் சந்தைகளுக்கு "இம்பாரா" எனும் பண்டப் பெயர் அறிமுகப்படுத்தப்பட்டது..

6. இலங்கையில் பிரதான ஏற்றுமதி / முதலீடு துறைகளினை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களினைக் கண்டுபிடிக்கும் ஐக்கிய இராச்சிய பதிவு செய்யப்பட்ட உள்ளார்ந்த கம்பனிகள் பிரதிநிதிகளுக்கான மெய்நிகர் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன் 8 வருடங்களாக தொழிற்பாடற்று இருந்த இலங்கை – ஐக்கிய இராச்சிய வர்த்தக மன்றம் வெற்றிகரமாக மீள ஆரம்பிக்கப்பட்டது.

7. இலங்கையில் IT/BPM முதலீட்டினை ஊக்குவித்தல் மற்றும் ளுடுயுளுளுஊழுஆ சநகநசசயட நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினை ஊக்குவிப்பதற்கு SLASSCOM மற்றும் APSL உடன் ஒருங்கிணைந்து "Launch of the SLASSCOM Global Referral Program" ஏற்பாடு செய்யப்பட்டது.

மலேசியா

1. Yalpanam வர்த்தக மன்றத்துடன் ஒருங்கிணைந்து யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தையில் மலேசியாவிலிருந்தான 16 தூதுக்குழுக்களுக்கு டீ2டீ கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

2. மலேசிய தயாரிப்பாளர்களின் சம்மேளத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை கம்பனிக்கு பிரயாணத் துறையிலுள்ள மலேசிய கம்பனியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

3. ஆசிய உபாய மற்றும் தலைமைத்துவ நிறுவகம் (ASLI) மற்றும் மலேசிய இலங்கை வர்த்தக மன்றம் (MSLBC) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மலேசியாவுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு பங்குடமையினை வலுப்படுத்தும் நோக்குடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

ரீயா

1. PRODEXPO 2020 இல் 05 இலங்கை தேயிலைக் கம்பனிகள் பங்கு பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

2. இலங்கை ஏற்றுமதிச் சபை, இலங்கை முதலீட்டுச் சபை, Saint-Petersburg இன் வர்த்தக மற்றும கைத்தொழில் மன்றம் என்பவற்றுடன் இணைந்து இலங்கையில் முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புக்கள் தொடர்பில் ரீய வர்த்தக சமூகத்துக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துமுகமாக இணைய வழியிலான வட்ட மேசை கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

3. ரீய இறக்குமதியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்காக இலங்கை ஏற்றுமதிச் சபையுடன் இணைந்து டிசம்பர் 15 ஆம் திகதியன்று தூய இலங்கை கறுவா தொடர்பான இணையவழி விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

4. உக்கிரெயினில் தரமான வர்த்தக குறியாக இலங்கைத் தேயிலை குறியினைப் பதிவு செய்வதில் வெற்றியடைந்தமை.

சிங்கப்பூர்

1. 10 இலங்கை கம்பனிகள், ஞ0010 இன் 06 வியாபாரிகள், சிறுவர்களின் எழுதுபொருட்களுக்கான இ-வர்த்தகம் மற்றும் பொம்மைகள் தொடர்பான கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் ஒத்துப் போகும் மெய்நிகர் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

2. மெய்நிகர் வர்த்தக ஒத்துப் போதல் அமர்வொன்று 5 இலங்கை கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் Gantner instruments மற்றும் IMS Asia மின்சார மற்றும் இலத்திரனியல் துறைக்காக நடாத்தப்பட்டது.

3. இலங்கை ஏற்றுமதிச் சபையின் ஒருங்கிணப்புடன; Print Pack virtual Trade fair

இல் 16 இலங்கை கம்பனிகள் பங்கு பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

4. நோய்த்தொற்று காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி கம்பனிகள் எவ்வாறு செயற்பட்டன என்பது குறித்து CNBC tpsf;fkspg;gjw;F SLEDB இன் தலைவரின் ஊடக நேர்காணலுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. தைத்த ஆடைகளினை உற்பத்தி செய்யும் நிறவனங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை எவ்வாறு தமது வியாபாரத்திற்கு ஆதரவளிப்பதற்கு பயன்படுத்திக் கொண்டன என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

5. சிறிய இலங்கை பூட் சிற்றியினைத் தாபித்தல் மற்றும் பண்டக்குறியிடப்பட்ட உற்பத்திகளுக்கான "APE KADE" மற்றும் "SingCeylon" என அழைக்கப்படும் 2 இ-வர்த்தக மேடைகளினை அறிமுகம் செய்வதற்கான வசதிகள் எற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

லயன் பியரினை அறிமுகம் செய்வதற்காக சிங்கப்பூர் கேளிக்கை விடுதிகள், உணவகங்களுடன்இணைப்பினை ஏற்படுத்தவதற்கு லயன் பியர் விநியோகஸ்தருக்கு வசதியளிக்கப்பட்டது.

தென்கொரியா

1. சியோலிலுள்ள UNIDO-ITPO கம்பனி மற்றும் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்ற சம்மேளனம் (FCCISL) என்பன ஒருங்கிணைந்து மின்சக்தி வலுத்த துறையில் கொரிய மற்றும் இலங்கை கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் B2B அமர்வுகள் சியோலில் ஏற்பாடு செய்யப்பட்டன. (முதலீட்டு மற்றும் ஊக்குவிப்பு அலுவலகம்)

2. உலகளாவிய உள்ளக கட்டமைப்பு ஒத்துழைப்பு மாநாடு (GICC) 2020 இன் போது கொரிய சர்வதேச ஒப்பந்ததார் சங்கம் (ICAK) மற்றும் இலங்கையின் தேசிய நிருமாணச் சங்கம் (NCASL) என்பவற்றுக்கிடையில் மெய்நிகர் வலையமைப்புக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

3. மிகப் பெரிய கொரிய தொடக்க நிறுவனமான "D-CAMP and Front one" உடன் வலையமைப்பு அமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கொரிய தொடக்க கம்பனியுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறிப்பாக இலங்கையின் ICT துறையில் உள்ள தொடக்க கம்பனிகளுடன் இணைப்பும் ஏற்படுத்தப்பட்டது.

4. Global Public Procurement Marketplace (GPPM) 2020 வலையமைப்பு நிகழ்வில், கொரியாவின் ஹன்சின் பாதணி கம்பனி, பியூட்டி பக்ரறி மற்றும் பேர்'ன் பாமஸியூரிகல்ஸ் என்பவற்றின் பிரதிநிதிகளுடன் இணைய வழி அமர்வுகள் நடாத்தப்பட்டன.

துருக்கி

1. துருக்கி பொருளாதார உறவுகளுடன் (ஹுஜுமு) ஒன்றிணைந்து 2020 நவம்பர் 18 ஆம் திகதி "Interconnected Business Matchmaking Session" எனும் செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இதில் 20 இலங்கை கம்பனிகள் கலந்து

கொண்டன.

2. இலங்கை வர்த்தக மன்றம் மற்றும் எஸ்கிசெஹிர் வர்த்தக மன்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைவுடன் இலங்கை மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையிலான இருதரப்பு வர்த்தகத்தினை விரிவாக்கும் நோக்குடன் 80 இற்கும் மேற்பட்ட இலங்கை மற்றும் துருக்கி கம்பனிகளுக்கான அறிமுக வர்த்தக வலையமைப்பு அமர்வினை ஏற்பாடு செய்தமை

3. 75 இலங்கை மற்றும் உக்கிரேனியன் கம்பனிகளின் பங்குப்பற்றுதலுடன் உக்கிரேனியன் வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றம் மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் ஆகியவற்றின் உதவுகையுடன் இலங்கை மற்றும் உக்கிரேனியன் வர்த்தக சமூகமானது "எதிர்கால ஒத்துழைப்பு" எனும் தலைப்பில் கருத்தரங்கினை ஏற்பாடு செய்தமை.

4. இலங்கை ஏற்றுமதிச் சபையின் உதவுகையுடன் துருக்கிய இறக்குமதியாளர்கள் ∴ வாசனத் திரவியங்களின் சிறப்புச் சந்தை வலையமைப்புக்களக்கான மெய்நிகர் வலையமைப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. 17 துருக்கி கம்பனிகள் மற்றும் துருக்கி பொதியிடப்பட்ட வாசனைத்திரவியங்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் (ABUDER) தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குபற்றியிருந்தார்கள்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

1. டுபாய் Business Breakfast மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் என்பவற்றுடன் ஒன்றிணைந்து எனும் தொனிப்பொருளில் இணையவழி கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இதில் ஏறக்குறைய 75 இலங்கை கம்பனிகள் பங்குபற்றியிருந்தன.

2. உலகின் மிகப்பெரிய வருடாந்த உணவு மற்றும் மென்பான வர்த்தக கண்காட்சியான "Gulfood 2020" இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டமை.

ஐக்கிய அமெரிக்கா

1. இலங்கை ஏற்றுமதிச் சபையின் ஒருங்கிணைவுடன் ஐக்கிய அமெரிக்காவில் இரண்டு வாசனைத்திரவியங்கள் இறக்குமதியாளர்களுடன் மெய்நிகர் B2B இணைய வலையமைப்பு அமர்வினை ஏற்பாடு செய்தமை.

2. ஐக்கிய அமெரிக்கா, வொஸிங்டன் டி.சி இல் அமைந்துள்ள ரொனால்ட் றீகன் கட்டிடம் மற்றும் சர்வதேச வர்த்தக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 9 ஆவது வருடாந்த சர்வதேச நிகழ்வில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமை.

3. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவுகையுடன் தேயிலை, இரத்தினகற்கள் மற்றும் ஆபரணங்கள், கொப்பரா உற்பத்திகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பவற்றினை ஊக்குவிப்பதற்கு ஐக்கிய அமெரிக்க வாங்குனர்கள் மற்றும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கிடையே ஏழு (07) மெய்நிகர் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆ. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஊக்குவிப்பு

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் (FDI) கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் வெளிநாடுகளிலுள்ள பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவராணமைகளுடன் உறுதியான வலையமைப்புக்களையும் தொடர்புகளையும் ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அவர்கள் இலங்கையில் தயாரிப்புக் கைத்தொழிற்சாலைகளின் விரிவாக்கத்திற்கான உள்ளார்ந்த கூட்டு தொழில்முயற்சிப் பங்காளர்களினை இனங்காண்பதற்காக இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் வியாபார தூதுக்குழுக்கள் ஒவ்வொன்றும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்ளார்ந்த முதலீட்டாளர்களை உரிய சந்தைகளில் சந்தித்து இலங்கையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

வர்த்தக உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சில தெரிவு செய்யப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு

பிறேசில்

இணைய வழி மூலமான முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமானது பிரேசிலின் கோசிஸ் (SINDIFARGO) மாநிலத்திலுள்ள மருந்தாக்கல் கைத்தொழில்களின் சங்கத்தில் நடாத்தப்பட்டது. மருந்தாக்கல் துறையில் இலங்கையில கிடைக்கக்கூடிய கூட்டு முயற்சி வாய்ப்புக்களை கவனத்தில் கொள்ளுமாறு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ்

1. 20 பிரெஞ்சு கம்பனிகள் மற்றும் 15 இற்கும் மேற்பட்ட இலங்கை கம்பனிகள் என்பனவற்றின் பங்களிப்புடன் இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் MEDEF International என்பன கூட்டுச் சேர்ந்து பிரெஞ்சு முதலீட்டாளர்களுக்கான “”இலங்கையில் முத்தலீட்டு வாய்ப்புக்கள்”” உனும் தலைப்பின் இணைய வழி மூலமான கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

2. பிரெஞ்சுத் திறைசேரியினால் நிதியிடப்பட்ட சிறிய பாற் பண்ணைக் கருத்திட்டத்திற்கான இயந்திரங்களை நிறுவுவதற்கு இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு BOCARD எனும் பிரெஞ்சு தொழில்நுட்ப குழு வசதியளித்துள்ளது. 6 சிறிய பாற்பண்ணை கருத்திட்டங்கள் பிரெஞ்சு நிபுணர்களின் உதவுகையுடன் இலங்கையில் நிறுவப்படும்.

இந்தியா

3. இந்திய இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றம், டில்லி பீடம் மற்றும் முதலீட்டுச் சபையின் ஒத்துழைப்புடன் இந்திய தயாரிப்புத் துறை மற்றும் வர்த்தக ஆலோசகர்களிலிருந்து 73 பேரின் பங்களிப்புடன் இலங்கையில் முதலீட்டு காலநிலை தொடர்பான இணைய வழி கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜப்பான்

1. 60 சிறிய மற்றும் நடுத்தரளவிலான கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் டெலோயிற் ஜப்பான், ரோக்கியோ நகர ஆரசாங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் இலங்கை ஊக்குவிப்புக் கருத்தரங்கொன்று ஆரம்பிக்கப்பட்டது.

2. "கொவிட்டுக்குப் பின்னரான பொருளாதார மீட்சி, சவால்களும் வாய்ப்புக்களும் - ஜப்பானிடமிருந்து இலங்கை நிபுணர்களுக்கான ஆலோசனைகள்" எனும் தலைப்பின் கீழ் இணைய வழி மூலமான கருத்தரங்கொன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆதரவுடன் நடாத்தப்பட்டது.

3. இணைய வழி மூலமான வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கொன்று 235 ஜப்பானிய பங்குபற்றாளர்களுடன் இலங்கை முதலீட்டுச் சபையின் ஆதரவுடன் நடாத்தப்பட்டது.

4. இலங்கையில் வர்த்தக வாய்ப்புக்களினைக் கண்டறிவது தொடர்பில ஜப்பானின் இரண்டாவது மிகப் பெரிய சக்தி பிறப்பாக்க கம்பனியான இடாமெற்சுடன் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. கம்பனியின் குழுவான்று இலங்கைகு விஜயம் செய்திருந்தது.

ஐக்கிய இராச்சியம்

1. இலங்கை மென்பொருள் சேவைகள் கம்பனிகள் (SLASSCOM) மற்றும் இலங்கை தொழில்சார் வல்லுனர்கள் சங்கம் (APSL) ஆகியவற்றின் கூட்டிணைவுடன் பிரித்தானிய மற்றும் இலங்கை தொழில்சார் வல்லுனர்களுக்கிடையே இலங்கையில முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பது தொடர்பில் இணையவழி மூலமான கருத்தரங்கு "Launch of the SLASSCOM Global Referral Program" எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது.
2. வெளிநாட்டவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையில் உள்நாட்டு வர்த்தக தரப்பொன்றுக்கு உள்ளார்ந்த ஐக்கிய இராச்சிய முதலீட்டாளர் ஒருவரினை அறிமுகப்படுத்துவதற்கு 3 தரப்புக்களுக்கிடையே மெய்நிகர் ஒத்துபோதல் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

பாகிஸ்தான்

1. பாகிஸ்தானில் வர்த்தக குழுவொன்றுக்கான பாகிஸ்தான் இலங்கை வர்த்தக மன்றம் ஒன்றுடன் இணைந்து முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பில் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது.

2. பாகிஸ்தானின் முன்னணி கைத்தொழில் நிபுணர்களிடமிருந்தான கோழிப் பண்ணை முதலீடுகள் மற்றும் இலங்கையில் சீனித் தயாரிப்பு கைத்தொழிலில் இஸ்லாமபாத்தில் உதவி உயர் ஸ்தானிகரின் உதவுகையுடன் இரண்டு முதலீட்டாளர் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

கொரியா

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வர்த்தக

மன்றம் மற்றும் புனித பீற்றரஸ்பர்க் கைத்தொழில் ஆகியவற்றுடன் இணைந்து முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புக்கள் தொடர்பில் கொரீய வர்த்தக சமூகத்தின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக இணைய வழி முலமான வட்ட மேசை கலந்துரையாடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிங்கப்பூர்

எல்லை கடந்த முதலிட்டாளர் நிகழ்ச்சித்திட்டங்கள் 15 கம்பனிகளுடன் இணைந்து நடாத்தப்பட்டதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான பகுதிகள் இனங்காணப்பட்டு அரசாங்க முன்னுரிமைகள் பகிரப்பட்டன. இரண்டு முன்மொழிவுகள் செயன்முறையிலுள்ளதுடன் 2021 இல் அமுல்படுத்தப்படவுள்ளன.

தென் கொரியா

1. இலங்கை மற்றும் கொரிய வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு முகவராண்மை (முழுவுசுயு) மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை என்பவற்றின் ஒருங்கிணைவுடன் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் வனப்புக்கள் தொடர்பில் உள்ளார்ந்த முதலீட்டாளர்கள், வர்த்தக இல்லங்கள் மற்றும் கூட்டிணைவு தலைவர்களினை ஊக்குவிக்கும் பொருட்டு இணைய வழியிலான கருத்தரங்கு நடாத்தப்பட்டது. "KOTRA TV" Youtube Channel இனூடாக 500 இற்கும் மேற்பட்ட பங்குபற்றாளர்கள் கலந்து கொண்டுள்ளதுடன் அநேகமானோரினால் நன்றாகப் பார்வையிடப் பட்டுமுள்ளது.

2. கொரிய வெளிநாட்டு மீன்பிடிக் கூட்டுத்தான நிலையத்தின் (KOFCC) வருடாந்த செயலமர்வில் "நீரியல் வளத் துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்தும் இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்கள்" மீதான செயல்முறை விளக்கமொன்று மேற்கொள்ளப்பட்டது. முன்னரே பதிவு செய்யப்பட்ட செயல்விளக்கமொன்று கொரியாவில் ""நாவர்" இணைய வழியிலான மேடையில் ஒலிபரப்பப்பட்டது.

3. கொரியாவில் நடாத்தப்பட்ட உலகளாவிய உள்ளக்கட்டமைப்பு ஒத்துழைப்பு மாநாடு – 2020 (GICC) இன் போது கொரிய சர்வதேச ஒப்பந்ததாரர்கள் சங்கம் (ICAK) மற்றும் இலங்கை தேசிய நிருமாண சங்கம் (NCASL) ஆகியவற்றுக்கிடையில் மெய்நிகர் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

சுவிற்சலாந்து

இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஆர்வமுடைய சுவிஸ் நாட்டு முதலீட்டாளர்களை இலக்கு வைத்து "இலங்கையின் வர்த்த மற்றும் முதலீட்டு வாய்ப்பு 2021" தொடர்பில் இணைய வழியிலான கருத்தரங்கொன்று ஏஏற்பாடு செய்யப்பட்டது. இது உள்ளார்ந்த முதலிட்டாளர்களின் பயனுக்காக இலங்கையில் வெற்றிகரமான வர்த்தகத்தினை மேற்கொள்கின்ற அவர்களின் இரண்டு தொழில் முயற்சிகளின் மூலம் இதற்கான அனுசரணை வழங்கப்பட்டது.

தாய்லாந்து

ரொயோட்டா கம்பனியின் பெறுமதிச் சங்கிலியுடன் இலங்கையின் மோட்டார் வாகன உற்பத்திகளினை இணைப்புச் செய்வதற்கான வாய்ப்பினைக் கண்டறிவதற்கு இலங்கையில் Toyota Daihatsu Engineering and Manufacturing Co Ltd, Panasonic Automotive Systems Asia Pacific Co.Ltd in Thailand and the SLINTEC, the SLEDB மற்றும் Electronic Manufactures மற்றும் Exporters Association (SLEMEA) என்பன இணைப்புச் செய்யப்பட்டன.

டுபாய்

ஜனாதிபதி செயலகம், மின்சக்தி வலு அமைச்சு மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை என்பன ஒன்றிணைந்து இலங்கையில் சூரிய மற்றும் காற்று மின்சக்தி கருத்திட்டம் தொடர்பில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் எம்/எஸ் பேன்ஸ் குழுமத்தினால் முதலீட்டு முன்மொழிவொன்று ஒருங்கிணைக்கப்பட்டது.

வியட்னாம்

முறையான இராஜதந்திர உறவுகளின் 50 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் முகமாக இலங்கைக்கும் வியட்னாமிற்குமிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான சர்வதேச மாநாட்டினை நடாத்தியமை.

1. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

சுற்றுலாத்துறையில் இலைமறை காயாக மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையினை ஊக்குப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலான இடமாக இலங்கையினை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான நடவடிக்கைகளில் மாநாடுகள், விசேட கருத்தரங்குகள், உபாயங்கள் மற்றும் சுற்றுலான குழுக்களை ஏற்பாடு செய்தல், சுற்றுலாக ஊக்குவிப்புக்கு இணை அனுசரணை வழங்குதல், ஊடக தூதுக்குழுக்களை மற்றும் சிநேக பூர்வமான பயண ஒழுங்க்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக விளம்பரங்களை மேற்கொள்ளுதல் போன்றனவும் உள்ளடங்குகின்றன.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம், இலங்கை சமவாயப் பணியகம் மற்றும் இலங்கையினை சுற்றுலா கேந்திர நிலையமாக மேம்படுத்துவதற்கான பொறுப்பு வாய்ந்த ஏனைய நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பிரதான நிகழ்வுகளில் சில கீழே தரப்படுகின்றன்

பெல்ஜியம்

1. 2020 ஜனவரி 17 இலிருந்து 19 வரையில் நடாத்தப்பட்ட Vakanz Expo Luxembourg இல் இலங்கையின் பங்குபெறலினை ஒருங்கிணைத்தல்.

2. 2020 பெப்ரவரி 6 இலிருந்து 9 வரையில் நடாத்தப்பட்ட புருஸல்ஸ் விடுறைச் சந்தையில் இலங்கையின் பங்குபெறலினை ஒருங்கிணைத்தல்.

பிறேசில்

1. 600 இற்கும் மேற்பட்ட பிறேசிலிய பயண வர்த்தக பங்குபற்றாளர்களினைக்

கவரும் பொருட்டு இலக்கு நோக்கிய விழிப்புணர்வு இணைய கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

2. இலங்கைக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு பிறேசிலிலுள்ள பயண வர்த்தக கம்பனிகளுடன் முப்பத்தி மூன்று (33) இணைய வழியிலான கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் நாட்டினை மேம்படுத்துவதற்காக அவற்றின் உதவுகையினைக் கோரியதும் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

கனடா

வெளி விவகார அமைச்சு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் என்பற்றின் ஒத்துழைப்புடன் 2020 ஜனவரியில் ரொறொன்ரோ மெற்றோ புகையிரதத்தில் ஒரு மாத காலம் விளம்பர பிரச்சார நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.

சீனா

1. 4800 இற்கும் மேற்பட்ட பங்குபெறுநர்களின் பங்குபற்றுதலுடன் சுற்றுலாத் துறையினை ஊக்குவிப்பதற்கு SLAITO உடன் ஒருங்கிணைந்து மெய்நிகர் கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

2. CITM சங்காய் பயண சந்தையில் இலங்கைக்கான இணையத்தள கூடாரமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரான்ஸ்

1. பண்டாரவளை பிரதேசத்தில் சந்தன மரங்களைப் பயிரிடப்படும் பகுதியில் திரைப்படம் எடுப்பதற்காக 2020 ஜனவரி 20 இலிருந்து 25 வரையில் இலங்கைக்கு விஜயம் செய்j "The French accent" எனும் பெயருடைய தயாரிப்புக் கம்பனியிலிருந்து நான்கு ஊடகவியலாளர்கள் விஜயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

2. யுசுவுநு வுஏ இல் ஒளிபரப்பாகும் "ஐஎவையவழைஎ யர ஏழலயபந" இற்காக சஞ்சிகையொன்றினை தயாரிப்பதற்கு 2020 பெப்ரவரி 27 இலிருந்து மார்ச் 17 ஆம் திகதி வரையில் இலங்கைக்கு விஜயம் செய்த "Elephant DOC" எனும் பெயருடைய தயாரிப்புக் கம்பனியிலிருந்து இரண்டு ஊடகவியலாளர்கள் விஜயம் செய்வதற்கு வசதியளிக்கப்பட்டது.

3. பதிவர்கள் மற்றும் ஆயுர்வேத அறிவுரையாளர்களின் பங்குபற்றுதலுடன் ஆயுர்வேதத்தினை ஊக்குவிக்கும் "Zen & Go" ஒன்றிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடு செய்தமை.

4. ஸ்பெயினில் இடம்பெற்ற FITUR சர்வதேச சந்தையில் இலங்கையின் பங்குபெறுதலினை ஒருங்கிணைத்தல்.

இந்தியா

1. SATTE 2020 இல் 63 இலங்கை பிரயாண மற்றும் பயண கம்பனிகள் மற்றும் சிறிலங்கா எயார்லைன்ஸ் என்பனவற்றின் பங்குபெறுதலினை ஒருங்கிணைத்தல்.
2. BLTM (Business Mice and Luxury Travel Mart) இல் 18 இலங்கை பிரயாணக் கம்பனிகளின் பங்குபெறுதலினை ஒருங்கிணைத்தமை.

3. இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்துடன் ஒருங்கிணைந்து TTF பெங்களூர் சுற்றுலாச் சந்தையில் இலங்கை பங்குபெறுவதனை ஒருங்கிணைத்தமை.

4. இன் ஒத்துழைப்புடன் Outbound Travel Mart **2020** (OTM) சிறிலங்கன் எயார்லைன்ஸ் உள்ளடங்கலான **35** பிரயாண முகவர்கள் மற்றும் ஹோட்டல்களின் பங்குபெறுதலினை ஒருங்கிணைத்தமை.

5.SLTPB இன் ஒத்துழைப்புடன் இந்திய சர்வதேச திரைப்பட சுற்றுலா மாநாட்டில் (IIFTC) இலங்கை பங்கு பெறுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டமை

இத்தாலி

SLTPB உடன் ஒருங்கிணைந்து டீஜவு மிலான் சுற்றுலாத்துறைச் சந்தையில் 12 இலங்கை சுற்றுலா முகவர்கள் பங்குபெறுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டமை.

ஐக்கிய இராச்சியம்

1. **2** மில்லியன் மக்களினால் நாளாந்தம் பார்வையிடப்படும் ITV UK ,d; "This Morning Show" நிகழ்ச்சியிலிருந்து தொலைக்காட்சி தயாரிப்புக் குழு வருகை தந்து இலக்கினை படம் பிடிக்கவும் இலங்கை உணவு வகைகள் குறித்து வார இறுதி நிகழ்ச்சியில் விளம்பரம் செய்வதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து குழுவானது **03** நேரடி உணவுக் காட்சிகளினை ஒளிபரப்புச் செய்தது.

1. "இலக்குகள்: விடுமுறை மற்றும் பிரயாணக் காட்சி – இலண்டன்" இல் பங்குபெறுவதற்கு 04 இலங்கை கம்பனிகளினை ஒருங்கிணைப்புச் செய்தமை.

மலேசியா

மலேசியாவில் அக்கறைதாரர்களின் பங்குபெறுதலுடன் வனசீவராசிகள் தொடர்பான மெய்நிகர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஏற்பாடு செய்தமை.

ரீயா

1. SLTPB ரொீயா எயார் லைன் மற்றும் ஏரோபிளட் என்பவற்றின் உதவுகையுடன் ரீயாவில் பிரயாண முகவர்களுக்கான தகவல் கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்தமை.

2. 80 ரீய சுற்றுலா ஏற்பாட்டாளர்களின் பங்குபெறுதலுடன் "கொவிட் 19 காலப்புகதிக்குப் பின்னரான இலங்கை சுற்றுலாத்துறை" எனும் இணைய வழி மூலமான கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்தமை.

சிங்கப்பூர்

சிங்கப்பூரிலுள்ள 50 வெளியக சுற்றுலா முகவர்களின் பங்குபற்றுதலுடன் சிறிலங்கன் எயார் லைன்ஸுடன் இணைந்து வீதி நாடகங்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை ஏற்பாடு செய்தமை.

தென்னாபிரிக்கா

ஒன்றிணைந்த சுற்றுலா பொதி வழங்கலுக்காக தென்னாபிரிக்க சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு இலங்கை சுற்றுலா ஏற்பாட்டாளர்களினை அறிமுகம் செய்தமை.

தென் கொரியா

1. இலங்கைக்கு "ட்ராவி" சஞ்சிகையிலிருந்து இரண்டு ஊடகவியலாளர்களுக்கு பழக்கப்படுத்திக் கொள்ளும் சுற்றுலாவொன்றினை ஏற்பாடு செய்தமை. 10 பக்கங்களுக்கு மேல் கண்கவரும் படங்கள் மற்றும் தகவல்களினை உள்ளடக்கியதாக 2020 ஜூனில் கட்டுரையொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

2. கொரிய ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "3 ஆவது பொதுமக்கள் இராஜதந்திர வாரம்" நிகழ்வில் மெய்நிகர் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சியொன்றினை ஏற்பாடு செய்தமை.

3. சியோல் நகர சஞ்சிகையில் இணையத்தளம் மற்றும் ஏனைய இலத்திரனியல் ஊடகங்களில் இலங்கையின் சுற்றுலாப் பயணிகளினைக் கவரும் வகையிலான வீடியோவினை வெளியீடு செய்வதற்கு கொரிய தூதுவர் நடபுறவுச் சங்கத்துடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தியமை.

தாய்லாந்து

தாய் சர்வதேச பிரயாணச் சந்தையில் (TITF) 12 இலங்கை கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தியமை.

துருக்கி

சுதந்திர தின கொண்டாட்டங்களை முன்னிட்டு ஸ்தன்புல் மற்றும் அங்கர பிரயாண வர்த்தக தொடர்புகளுக்கான வலையமைப்பு அமர்வினை ஏற்பாடு செய்தமை.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

1. இரண்டு புதினப் பத்திரிகை இணைப்புக்கள் மற்றும் செய்திக் கட்டுரைகள் என்பன இலங்கையின் வர்த்தக, சுற்றுலாத்துறை மற்றும் முதலீடு மற்றும் கலாச்சாரத்தினை ஊக்குவிக்கும் வகையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இரண்டு முன்னணி புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

2. சிறிலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் ஸுடுவுடீ என்பவற்றுடன் ஒன்றிணைந்து இலங்கைக்கு டுபாயிலிருந்தான சுற்றுலா ஏற்பாட்டாளர்களினைக் குழுவொன்றினால் FAM Tour ஒருங்கிணைக்கப்பட்டமை.

ஐக்கிய அமெரிக்கா

நியூ யோரக் ரைம்ஸ் ட்ரவல் ஷோவில் 7 இலங்கை பிரயாண / சுற்றுலா கம்பனிக்ள பங்கு பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டமை.

வியட்னாம்

வியட்னாமிய மொழியில் சமூக வலைத் தளங்களில், 2020 இல் பயணம் செய்வதற்கு மிகச் சிறந்த 20 இடங்களில் ஒன்றாக இலங்கையினைத் தெரிவு செய்வதாக CNN Travel இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

II வர்த்தக விசாரணைகளினை வழங்குதல்

மீளாய்வுக் காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் ஏறக்குறைய அத்தகைய **2181** விசாரணைகளினைப் பெற்றுள்ளதுடன் இலங்கையானது முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையில் கேந்திர நிலையமாக இருப்பதால் இவை அனைத்தும் வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் பொருட்டு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியதன் மூலம் முறையாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் எதிர்கால ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏனைய வர்த்தகம் தொடர்பான முகவராண்மைகளிடமிருந்து வர்த்தக திணைக்களத்தினால் விசாரணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இது உடனடி நடவடிக்கைகளினை எடுக்குமாறு வர்த்தக உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டனர்.

III வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான உதவுகை

வர்த்தகம் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர் களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் நோக்குடன் வர்த்தக திணைக்களமானது மத்தியஸ்தராக / வசதிப்படுத்துனராக தொழிற்பட்டு வருகின்றது. குறித்த காலப்பகுதியில், வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் அத்தகைய **121** முறைப்பாடுகள் கையாளப்பட்டுள்ளன.

IV வதிவிட விசாக்களுக்கான பரிந்துரை

வர்த்தக அமைச்சின் செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, வர்த்தக திணைக்களமானது தகுதிவாய்ந்த பலம்பெயர்ந்தவர்கள், உசாவுலர்கள், நிபுணர்கள் மற்றும் இணைப்பு அலுவலகங்களில் பணியாற்றும் அவர்களின் தங்கியிருப்போர், கிளை அலுவலகங்கள் அல்லது வெளிநாட்டுக் கம்பனிகள், ஏனைய வர்த்தக மற்றும் வியாபார தொழில் முயற்சிகளுக்கான பரிந்துரைக் கடிதங்களை அத்தகைய ஏற்றுமதி வர்த்தகத்திற்கான தொழில்வாய்ப்புக்கள், தொழில்நுட்ப மாற்றீடு மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கான உற்பத்தி மேம்பாடு போன்றவற்றிற்குக் கிடைக்கக்கூடிய நேரடிப் பயன்களினைக் கருத்தில் கொண்டு வழங்குகின்றது.

2020 ஆம் ஆண்டில், வர்த்தக மற்றும் சேவைகள் துறைகளினைச் சேர்ந்த **96** புலம்பெயர்ந்தவர்களுக்கும் அவர்களின் **92** தங்கியிருப்போருக்கும் வதிவிட விசாக்களுக்கான பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏ. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியிடலில் வர்த்தகத்துடன் தொடர்புடைய திறன்கட்டியெழுப்பும் கருத்திட்டங்கள்

"ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை வர்த்தகம் தொடர்பான உதவுகை: பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளினை அதிகரித்தல்" கருத்திட்டமானது 18 ஆவது ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை கூட்டு ஆணைக்குழுவிற்கு இணையாக புறுசல்ஸில் 2013 டிசம்பர் 02 ஆம் திகதி நடாத்தப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மீதான ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை தொழிற்படு குழுவிற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டது.

கருத்திட்டத்தின் முற்றுமுழுதான நோக்கம், வர்த்தக நோக்கிலான வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒருங்கிணைவு உள்ளடங்கலான இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பினை வழங்குவதன் மூலம் வறுமை ஒழிப்புக்குப் பங்களிப்பினை வழங்குவதேயாகும். சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் UNIDO என்பன இக்கருத்திட்டதினை அமுல்படுத்தும் முகவராண்மையாக செயற்படும் அதேவேளையில், இக்கருத்திட்டத்தின் தேசிய இணைப்பாளராக வர்த்தகத் திணைக்களம் விளங்குகின்றது.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கருத்திட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

- பகுப்பாய்வுத் திறன்களை விரிவாக்கும் பொருட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் வர்த்தக கொள்கை பகுதியில் தொழில் புரியும் வர்த்தக திணைக்களத்தின் உத்தியோகத்ர்களுக்கான STATA மீதான பயிற்சிப் பாடநெறியினை ஏற்பாடு செய்தல்.

  GSP+ இன் தற்போதைய தகுதி நிலையினை இற்றைப்படுத்துதல், GSP+ பயன்கள் தொடர்பான விழிப்புணர்வினை மேலும் உருவாக்குதல் மற்றும் மூல விதிகளின் வழங்குகையினை விபரிக்கும் GSP+ வரிச்சலுகைகளின் பயன்பாட்டினை அதிகரிப்பது எவ்வாறு என்பது தொடர்பான தகவல்களை வழங்கும் பொருட்டு அக்கறைதாரர்களுக்கான "விரிவாக்கப்பட்ட சந்தை அணுகுமுறைக்கான GSP+" தொடர்பில் இணைய வழியிலான கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டமை.

- 23 ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் 6 இறக்குமதிப் பொருட்கள் உள்ளடங்கலாக 29 உற்பத்திப் பொருட்களைக் கண்டறிவதன் மூலம் SLTIP இன் பயனர் நட்புறவினை மேம்படுத்துதல். 2021 பெப்ரவரி 09 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

- TFA வகையீடு C நடைமுறைகளுக்காக கருத்திட்ட முன்மொழிவு அபிவிருத்தி தொடர்பில் இணைய வழி மூலமான செயலமர்வினை ஏற்பாடு செய்தல்.

- 'இழைய வழி மூலமான வர்த்தகம் தொடர்பான வழிகாட்டுதல்கள்" அறிக்கையானது மேம்படுத்தப்பட்டதுடன் இணைய வழி மூலமான வர்த்தகத்தினை ஒழுங்கமைக்கும் அதன் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் பாவனையாளர் அதிகாரசபையுடன் பகிரப்பட்டது. (குறிப்பாக, கொவிட் – 19 தாக்கத்தின் காரணமாக)

- இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) வேண்டுகோளுக்கிணங்க, ITC ஆனது உலகின் மிகச் சிறந்த நடைமுறைகளுக்கமைவாக கொண்டு வரும் பொருட்டு புதிய SLTDA சட்ட வரைபினை மீளாய்வு செய்துள்ளது.

- முதலீட்டுச் சபைக்காக முதலீட்டு சட்ட இடைவெளி பகுப்பாய்வொன்றினை நடாத்துதல்.

- எழுபத்தியாறு (76) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அவற்றின் ஏற்றுமதி முகாமைத்துவ நடவடிக்கைகளினை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டது.

- ITC-NIOE இ- கற்றல் வசதியினூடாக இலங்கையின் ஏற்றுமதி நடைமுறைகள் தொடர்பில் இருநூற்றி இருபத்தியெட்டு (228) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

- ஏழு இலங்கை தகவல் தொழில்நுட்ப (IT) சேவைகள் மற்றும் வெளியக கம்பனிகள் என்பவற்றுக்கிடையில் வியாபாரங்களுக்கிடையே ஒத்திசைவான நிகழ்விற்கு அனுசரணை வழங்கும் அதேவேளையில் இலங்கைக்கான வெளியக தகவல் தொழில்நுட்ப சேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் நோக்குடன் 60 இற்கும் மேற்பட்ட மெய்நிகர் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- SLASSCOM இற்கு அதன் சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அதன் செயலாற்றுகையினை மேம்படுத்துவதற்கு உதவியளித்தல்.

- உற்பத்தியாளர்கள் / செயன்முறைப்படுத்துனர்கள் மற்றும் நீடிப்புக்காக இலங்கை கட்டளைகள் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பதினைந்து (15) பயிற்சி / விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.

- பிஸ்கற்றுக்கள், சிறிய மென்பானங்கள், போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் என்பவற்றின் பெயர்கள் மீது ISO 17065 இற்கெதிரான தர நிர்ணயப்படுத்தலுக்காக SLAB இற்கு சமர்ப்பிப்பிக்கப்பட்ட SLS உற்பத்திச் சான்றுப்படுத்தல் குறிக்கான ("SLS FwpaPL") மூன்று இணக்க மதிப்பீட்டு திட்டங்கள்.

- ஐரோப்பிய ஒன்றியம் பிரசுரித்த உத்தியேகபூர்வ நாளேட்டில் இலங்கை கறுவா GI இற்கான பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்.

1.5.5 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

I. ஆராய்ச்சி நடவடிக்கைகள்:

அ. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான ஆராய்ச்சி

பின்வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பில் நடாத்தப்பட்டன:

- இலங்கை ஏற்றுமதிகளின் மீதான பிராந்திய விரிவான பொருளாதார பங்குடமையின் (RCEP) தாக்கம்

- ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய – வியட்னாம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (நுஏகுவுயு) தாக்கம்

- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் அமுலாக்கலின் பின்னர் இந்திய சந்தைக்கான உற்பத்திப் பொருட்களினை பல்வேறுவகைப்படுத்துதல்.

- இந்திய சந்தையில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர் நோக்க வேண்டிய தரிவல்லா நடவடிக்கைகள்.

- சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பங்காளர் நாடுகளுக்கான புதிய உள்ளார்ந்த உற்பத்திப் பொருட்கள்

அ. உலகத்துடனான இலங்கை வர்த்தகம் தொடர்பான ஆராய்ச்சி

உலகத்துடனான இலங்கை வர்த்தகம் தொடர்பில் பின்வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன:

- வர்த்தக உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளுக்கான இலங்கை ஏற்றுமதிகள்

- இலங்கை மூலம் உலக வர்த்தக நிறுவனத்தின் கீழான தரிவு இணக்கப்பாடுகள்.

- இலங்கையின் ஆசிய மைய இறக்குமதிகள் மற்றும் மேற்கு மைய ஏற்றுமதிகள்

- 1977 மற்றும் 2019 இல் உலகுக்கான இலங்கை ஏற்றுமதிகளின் ஒப்பீடு

- இலங்கையின் இறக்குமதி தரிவுகள் மற்றும் ஏனைய தீர்வைகள்

- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் செயலாற்றுகை மதிப்பீடு.

- அத்தியாய ரீதியிலான வர்த்தக மீதி, இறக்குமதி செறிவு மற்றும் ஏற்றுமதி செறிவு

- வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்கங்கள் மீது இலங்கையினால் விதிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகிளன் தாக்கம்

- வர்த்தக உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளுக்கு இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சீரற்ற சந்தை அணுகுமுறை.

II. **சந்தை அணுகுமுறை வாய்ப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்:**

அ. வர்த்தக சமூகத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பின்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன:

- இலங்கை வர்த்தக மன்றத்தில் இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான வாய்ப்புக்கள்'
